www.ekuruvi.com
e குருவி

சிறகு - 01 | 19.10.2012 | பறப்பு -05

ஒன்ராறியோ முதல்வர் டால்ரன் மெக்கன்டி
திடீர் இராஜினாமா!



2011 கனேடிய தமிழ் வர்த்தக சம்மேளத்தின் வருடாந்த விருது விழாவில்

ஒன்ராறியோ லிபரல் கட்சி முதல்வர் டால்ரன் மெக்கன்டி இன்றிரவு திடீரென முதல்வர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார். இன்று காலை அவர் லெப்டினென்ட் ஜெனரலை சந்தித்து தான் இராஜினாமா செய்வது குறித்து விளக்கியுள்ளார். பின்னர் மாலையில் நடைபெற்ற லிபரல் கட்சியின் பாராளுமன்ற உபகுழுக் கூட்டத்தில் ஆறு மணியளவில் தனது அதிர்ச்சியான முடிவினை அறிவித்தார். இக்கூட் டத்தில் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆசிரியர்களின் சம்பள உயர்வை கட்டுப்படுத்தும் வகையில் அவர் மேற்கொண்ட நடவடிக்கை பலத்த சவாலாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எதிர்க் கட்சியினரும் சம்பள உயர்வு கட்டுப்பாடு சம்பந்த மாக தம்முடன் பேச்சுவார்த்தை நடாத்தி இணக்கப் பாட்டினைக் காண முன்வர வேண்டும் எனவும் முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

லிபரல் கட்சியின் தலைவரை தெரிவு செய்வதற்கான மாநாட்டை விரைவில் நடாத்துமாறும் அவர் கோரி க்கை விடுத்துள்ளார். புதிய தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்படும் வரையில் தான் முதல்வராகப் பணி யாற்றுவதாகவும் கூறினார். ஒன்ராறியோ லிபரல் கட்சியின் தலைவராக 16 வருட காலமும், முதல்வராக ஒன்பது வருட காலமும் பணியாற்றிய டால்ரன் மெக்கன்டி புதிய தலைவருக்கான வேளை வந்து விட்ட தெனவும் கூறினார்.

ஒன்ராறியோவின் அடுத்த முதல்வர்
ஜோர்ஜ் சிமிதமென்?



ஒன்ராறியோவின் அடுத்த முதல்வராக முன்னாள் லிபரல் எம்.பி.பி.யும் அமைச்சருமான திரு.ஜோர்ஜ் சிமிதமென் வரலாமென எதிர்பார்க்கப் படுகின்றது. ஒன்ராறியோ முதல்வாரன திரு. டால்ரன் மெக்கன்டி திங்களன்று மாலை தான் முதல்வர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.மாகாண முதல்வர் பதவியை விடுத்து மத்திய அரசின் லிபரல் கட்சித் தலைவராக வரும் எண்ணத்துட னேயே அவர் தனது மாகாண முதல்வர் பதவியை துறந்துள்ளதாகவும் அவ்வாறு போட்டியிட்டால் அதில் அவர் வெற்றி பெறுவார் என்றும் சிலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

அவர் பதவி விலகியுள்ள்தை அடுத்து, அடுத்த முதல்வர் யார் என்ற கேள்வி எழுந்தது. முதல்வராகும் தகுதியை உடையவர் முன்னாள் அமைச்சரான திரு.ஜோர்ஜ் சிமிதமென்னே எனக் கருதிய ஊடகவிய லாளர்கள் அவரிடம் நேரடியாகக் கேட்ட போது முதல்வராகும் எண்ணம் தனக்கு இல்லை எனக் கூறியுள்ளார்.

இதே போன்று தான் அவர் தனது அமைச்சர் பதவியிலிருந்து விலகி ரொறண்டோ மாநகர சபையின் மேயர் பதவிக்கு போட்டியிடுவதற்கு முன்னர் அவரிடம் ஊடகவியலாளர்கள் அதுபற்றி கேள்வி எழுப்பிய போது அவர் அதை மறுத்திருந்தார். ஆனால் திரும்ப அவர் மேயர் பதவிக்குப் போட்டியிட்டு தோல்வி உற்றமை குறிப்பிடத்தக்கது. அவர் மூன்று முறை மாகாண சபைக்கான எம்.பி.பி. தேர்தலில் போட்டி யிட்டு வெற்றி பெற்றவர். 1964ம் ஆண்டு பிறந்து தந்தையாரின் வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டிருந்த இவர் 1999ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 2003ம் ஆண்டு முதல் 2008ம் ஆண்டு வரை சுகாதார அமைச்சராக இருந்து பல முன்னேற்றமான திட்டங்களை அமுலுக்கு கொண்டு வந்தார். 2008ம் ஆண்டில் சக்தி, வீதி நிர்மாண அமைச்சராக நியமிக்கப்பட்டார். 2010ம் ஆண்டு தனது அமைச்சர் பதவியை இரரிஜனாமா செய்து விட்டு ரொறண்டோ மேயர் பதவிக்குப் போட்டியிட்டு தோல்வியுற்றார்.

முதலில் திருமணம் செய்து குடும்ப வாழ்வில் ஈடுபட்டிருந்த இவர் பின்னர் குடும்ப வாழ்வினை வெறுத்து தன்னினச் சேர்க்கையில் ஈடுபாடு கொண்டு பகிரங்கமாக தானொரு “Gay” என அறிவித்தார்.

பிரம்டன் பள்ளி முதல்வர் சுட்டுக் கொலை!



ஜார்ஜ் டவுன் பகுதியில் உள்ள பேட்டி ஃப்ளெம்மிங் சீனியர் பப்ளிக் ஸ்கூலின் முதல்வர் டெப்ரா ஆலன் தனது வீட்டில் மர்மமான முறையில் சுடப்பட்டு இறந்து கிடந்தார். அவருடைய கணவர் டேவ் ஆலனும் இந்த துப்பாக்கி சூட்டில் மரணமடைந்தார். இந்த மரணங்களுக்கு குடும்பத் தகராறு காரணமாக இருக்கும் என தெரிகிறது.

இது குறித்து சிறப்பு விசாரணைப் படை தீவிரமாக விசாரித்து வருகிறது. ஆனால் அந்த விசாரணை குறித்து அவர் கள் தகவல் எதுவும் தெரிவிக்க மறுத்துவிட்டார்கள்.

“மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஈடு செய்ய இயலாத இழப்பு இது“ என்று பீல் மாகாண பள்ளி வாரியம் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளது. பள்ளியின் கொடி துக்கம் தெரிவிப் பதற்காக அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

சனிக்கிழமை அன்று மதியம் இரண்டு மணிபோல் ஒரு பெண்ணின் கூக்குரல் கேட்டி ருக்கிறது. ஓடி சென்று பார்த்தபோது வீட்டில் கார் கொட்டகையிலிருந்து துப்பாக்கி குண்டுகள் சீறிப்பாய்ந்து அந்த பெண்ணின் மீது பாய்ந்திருக்கிறது. இந்த சம்பவம் இப்போது விசாரணை நடந்துக் கொண்டிருக்கிறது.

மீண்டும் ஒரு ஆட்குறைப்பு!



கனடாவில் தொடர்ந்து வரும் ஆட்குறைப்பு பட்டியலில் லோப்லா நிறுவனமும் இணைந் திருக்கிறது. ஏறத்தாழ 700 ஊழியர்களை இந்த வருடம் வீட்டுக்கு அனுப்ப இருக்கிறது. இவர்கள் அனைவரும் ரொறான்ரோவிலுள்ள தலைமயகத்தில் நிர்வாக பணியில் இருப்பவர்கள்.

லோப்லா, செஹர்ஸ், ரியல் கனடியன் சூப்பர் ஸ்டோர் என பல பெயர்களில் இயங்கும் இந்த நிறுவனம் முழு நேர, பகுதி நேர ஊழியர்கள் என மொத்தம் ஒரு லட்சத்து முப்பத்தைந்தாயிரம் ஊழியர்களை கொண்டுள்ளது.

“செலவுகளைக் கட்டுப்படுத்ததான் இந்த ஆட்குறைப்பு நடவடிக்கை.“ என்று இந்த குழுமத்தின் தலைவர் விசெண்ட் ட்ரையஸ் தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கை உடனடியாக செயல்படுத்தப்படும் என்றும் இது குறித்தான அறிவிப்பு ஊழியர்களுக்கு அனுப்பபடும் என்றும் இன்னும் மூன்று வாரங்களில் அது முடிந்து விடும் என்று அந்நிறுவன செய்திகள் சொல்லுகின்றன,

ஆஸ்திரேலியரை கண்டுபிடித்த கனடிய விமானம்!


நடுக் கடலில் காணாமல் போய் தத்தளித்துக் கொண்டிருந்த படகையும் அதிலிருந்த மாலுமியையும் கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறது கனடிய விமானம் ஒன்று. இதற்காக ஆஸ்திரேலிய அதிகாரிகள் கனடிய விமான பணியாளர்களுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள்.

பிட் வாட்டர் என்பவர் தனியே சிட்னியிலிருந்து நியு சவுத் வேல்ஸ்க்கு படகில் கிளம்பி யிருக்கிறார். ஆனால் நடுவழியில் அவர் திசை மாறிவிட்டார். சிட்னி கடற்கரையிலிருந்து கிட்டத்தட்ட ஐநூறு கிலோ மீட்டர் தள்ளிச் சென்று விட்டார்.

படகிலிருந்த அவசர சமிக்ஞயை அழுத்தி தான் ஆபத்தில் இருப்பதை கடற்படைக்கு தெரிவித் திருக்கிறார். ஆனால் அவர்களால் அவர் எந்த இடத்தில் தவித்துக் கொண்டிருக்கிறார் என்பதை துல்லியமாக கண்டுபிடிக்க இயலவில்லை.

அந்த சமயத்தில் கனடிய விமானம் ஒன்று அந்தக் கடல் மேல் பறந்துச் சென்றிருக்கிறது. அந்த விமானத்துக்கு தகவல் சொல்லப்பட, விமானம் வழக்கத்துக்கு மாறாக பல மைல்கள் கீழிறங்கி கடல் மேல் பறந்திருக்கிறது. அப்படிப் பறக்கும் போது படகையும் பிட் வாட்டரையும் கண்டுபிடித்து கடற்படைக்கு தகவல் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தகவலின் உதவியால் ஆஸ்திரேலிய கடற்படையினர் விரைந்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்

வைரத்தினாலான கிரகம் கண்டுபிடிப்பு



ஒரு பகுதி வைரத்தினாலான பூமியை போன்ற 2 மடங்கு பெரிதான கிரகத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். 55 Cancri e என்று பெயரிடப்பட்டுள்ள இக்கிரகத்தை பிரெஞ்சு – அமெரிக்க ஆராய்ச்சி குழுவினர் கண்டுபிடித்துள்ளனர். இக்கிரகத்தின் மேற்பரப்பு காரீயம் மற்றும் வைரத்தினால் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெக்கண்டி ராஜினாமா செய்தது ஏன்?

புதுத் தகவல்கள்

ஒன்ராறியாவின் முதல்வர் பொறுப்பிலிருந்து டால்ரன் மெக்கண்டி திடிரென ராஜினாமா செய்திருப்பது பல கேள்விகளை எழுப்பியுள்ளது. கடந்த சில மாதங்களாகவே ஒன்ராறியோ மாநில லிபரல் கட்சியினர் மீது பல வித குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வந்தன. கட்டுப்பாடு இல்லாத வான் அவசர மருத்துவ ஊர்திகளின் செயல்பாடுகள் குறித்து பல்வேறு புகார்கள் எழுந்தன. அது தொடர்பாக இரண்டாவது அவமதிப்பு தீர்மானம் கூட நிறைவேறியது.

அடுத்து மிசிசாகாவிலும் ஒக்விலேயிலும் அமையயிருந்த எரிவாய் ஆலைகளை இட மாற்றம் செய்த உத்தரவால் பொது மக்களின் பல மில்லியன் டாலர் பணம் வீணாகியது என்ற குற்றச்சாட்டு எழுந்தது. ஆனால் எரிவாயு ஆலைகள் இடமாற்ற பிரச்சனையால் தான் விலகவில்லை என்று மெக்கண்டி சொல்லியிருக்கிறார்.

இவற்றையெல்லாம் விட முக்கியமான காரணமாக சட்டசபையில் லிபரல் கட்சியினரின் சிறுபான்மை நிலை மெக்கண்டிக்கு வெறுப்பைத் தந்தது என்கிறார்கள். ஒவ்வொரு முறையும் உதிரிக் கட்சிகளின் ஆதரவை எதிர் நோக்கியே எந்த காரியத்தையும் செய்ய வேண்டியிருந்ததால் அவரால் சுதந்திரமாக் செயல்பட முடியவில்லை.


'தனது புதிய பொருளாதார திட்டங்கள் எதையும் மெக்கண்டியால் செயல்படுத்த இயலவில்லை, அதற்கான ஆதரவு அவருக்கு கிடைக்கவில்லை என்பதால் அவர் ராஜினாமா செய்ய நேரிட்டது' என்று ஹென்ரி ஜேசக் தெரிவித்துள்ளார். இவர் மெக்மாஸ்டர் பல்கலைக்கழகத்தில் அரசியல் துறை பேராசிரியராக இருக்கிறார். 'அவருக்கு பெரும்பான்மை இல்லாததால் பொது நிதி தொடர்பான அவரது திட்டங்களையும் செயல்படுத்த இயலவில்லை. ராஜினாமாவைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை' என்கிறார் ஹென்ரி.

'சமீபத்திய கருத்துக் கணிப்புகளில் அவர் மக்கள் மத்தியில் பிரபலமாக இல்லை என்று தெரிய வந்தது, அது மட்டுமில்லாமல் செப்டம்பர் மாதம் நடந்த இடைத் தேர்தலில் லிபரல் கட்சி மூன்றாவது இடத்தைதான் பிடித்தது. இவையெல்லாம் கூட காரணமாக இருக்கலாம்' என்று கூறுகிறார் அரசியல் விமர்சகர் ராபர்ட் ஃபிஷ்ஷர். இதற்கிடையே 'தலைமைப் பதவிக்கு போட்டி போட விரும்புபவர்கள் தங்கள் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்து விட்டு போட்டியிடலாம்' என்று ராஜினாமா செய்த முதல்வ மெக்கண்டி தெரிவித்துள்ளார்.

'அமைச்சராகவும் இருந்துக் கொண்டு தலைவருக்கான தேர்தலிலும் கலந்துக் கொள்வது சிரமமான காரியம். நிறைய சக்தி தேவைப்படும்.அதனால் ஏதாவது ஒரு வழியை தேர்ந்தெடுத்துக் கொள்வது நல்லது' என்கிறார் மெக்கண்டி.

நேரடியாக மோதினார்கள் ஜனாதிபதி வேட்பாளர்கள்

முந்துகிறார் ஒபாமா



செவ்வாய் இரவு இரண்டாவது முறையாக நேரடி விவாதத்தில் மோதினார்கள் அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் பராக் ஒபாமாவும் மிட் ரோம்னியியும். இது அத்தனை எளிதான மோதல் அல்ல. உலகிலேயே மிக முக்கியமான தேர்தலில் போட்டியிடும் இருவரின் நேரடியான, முகத்துக்கு முகம் பார்த்த மோதல். ஒன்றரை மணி நேரம் நடந்தது,

'ஜனாதிபதி ஒபாமா நிறைய முயற்சி செய்தார். ஆனால் அவரால் முடியவில்லை. அவர் மிக சிறந்த பேச்சாளர். தன்னுடைய திட்டங்களை யும் கனவுகளையும் அழகாக பேசுவார். ஆனால் அவரால் எதையும் செயல்படுத்த இயலவில்லை என்பது அவருடைய வரலாற்றைப் பார்த்தல் தெரிகிறது' என்று ஒபாமாவைத் தாக்கி ரோம்னி பேச அதற்கு பதிலடி கொடுத்தார் ஒபாமா. 'இவருடைய முன்னோடி ஜார்ஜ் புஷ் தீவிர குணம் மிக்கவர். அவருக்கும் ரோம்னிக்கும் என்ன வித்தியாசம்? என்று கேட்டார்.

பெண்கள் வேலை வாய்ப்பு பற்றி பேசும்போது ' நானும் என்னுடைய அலுவலகத்தில் நிறைய பெண்கள் வேண்டும் என்று கேட்டேன், உடனே 'பைண்டர்'களில் பெண்களைக் கொண்டு வந்து விட்டார்கள்' என்று ரோம்னி சொல்ல, அந்த பைண்டர் என்ற வார்த்தைக்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. பைண்டர்கள் என்றால் காகிதங்கள், பத்திரிகைகள் போன்ற பொருட்களை கொண்டு செல்லும் பை. இந்த சொல்லை வைத்து ட்விட்டர் மற்றும் ஃபேஸ்புக் போன்ற சமூக இணையதளங்களில் ஏகப்பட்ட கிண்டல் கணைகள் ரோம்னியை நோக்கி பாய்ந்திருக்கிறது.

சில நாட்களுக்கு முன் நடந்த முதல் நேரடி விவாதத்தில் ரோம்னி முன்னிலை பெற்றதாக கருத்துக் கணிப்புகள் தெரிவித்தன. இந்த மோதலில் ரோம்னியின் முன்னேற்றத்தை தடுத்ததோடு தானும் சற்று முன்னேறியிருக்கிறார் என்று தகவல்கள் கூறுகின்றன.


பொதுநல நிதி யாருக்குப் போகிறது

கடந்த இரண்டு வருடங்களில் ரொறண்ரோ எறத்தாழ 800 நகர டாக்ஸி ஒட்டுநர்கள், சுமார் நடன மங்கைகள், சாலையில் பாட்டுப்பாடி காசு கேட்பவர்கள் 32 பேர் என பலர் பொதுநல நிதி யிலிருந்து நிதி பெற்றிருக்கிறார்கள். இதன் மொத்த தொகை 20 மில்லியன் டாலர்களைத் தொட்டு விட்டது. பொதுநல நிதியிலிருந்து பணம் பெற வேண்டுமானால் அந்த நபருக்கு எந்த வருமானமும் இருக்கக் கூடாது. அவருடைய சம்பாத்தியம் பூஜ்யமாக இருக்க வேண்டும்.

எப்படி 800 டாக்சி ஒட்டுநர்கள் பூஜ்ய வருமானம் என்று சொல்லி பொது நல நிதியிலிருந்து பணம் பெறலாம்?' என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார் ரொறன்ரொ நகர சபை உறுப்பினர் டென்சில் மினன் வாங். இவர்கள் மட்டுமல்ல இந்த நிதியிலிருந்து பணம் பெற்றவர்கள் பலர் தங்களுக்கு வரு மானம் பூஜ்யம் என்று தெரிவித்திருக்கிறார்கள். இவையெல்லாம் பல கேள்விகளை எழுப்புகின்றன' என்கிறார் வாங்.

ஒரு டாக்சி ஒட்டுநர் இப்படி பணம் பெறும் மற்ற டாக்சி ஒட்டுநர்களைப் பற்றி புலம்புவதைக் கேட்ட நகரசபை உறுப்பினர் இது குறித்து தலைமை கணக்காளரிடம் கேள்வி எழுப்பியுள்ளார் அதன் மூலம் இப்படி பணம் பெறும் தகவல்கள் வெளிவந்துள்ளது. இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். இது போன்று எத்தனை பேர் பணம் பெற்றுக் கொண்டிருக்கிறார்களோ, அது குறித்தும் விசாரிக்கப்படும்' என்று நகர துணை மேயர் டொக் ஹாலிடே தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்களை புகழ்ந்து தள்ளுகிறார் லிபரல் கட்சி தலைவர் தேர்தலில் போட்டியிடும் ஜஸ்டின்!!




லிபரல் கட்சியின் தலைவர் தேர்தல் நெருங்குவதைத் தொடர்ந்து இதற்கான வாக்குச் சேகரிக்கும் பணிகளும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. தற்போதைய நிலையில் தலைவர் தேர்தலில் போட்டியிடும் பிரபலங்களில் ஒருவரான ஜஸ்டினுக்கு கட்சியிலும் , மக்களிடத்திலும் செல்வாக்கு அதிகம் காணப்படுவதால் அவரை பிரதானப்படுத்தி பரப்புரைகளை மேற்கொள்ளும் பணிகளை சமூக ஊடகங்கள் சில மேற்கொண்டு வருகின்றன.

நேற்று ரொறொன்ரோவில் பேஸ்புக் நடத்திய நிகழ்வொன்றில் பங்கேற்ற Mr. Trudeau சமூக வலைத்தளங்கள் கனடிய அரசியலில் முக்கிய இடத்தினைப் பிடித்து விட்டதாகவும், தேர்தலின் போது இளையோரிடம் தங்கள் கொள்கைகள் சென்றடைய தற்போது இருக்கும் ஒரே வழி பேஸ்புக் உள்ளிட்ட பிரபல சமூக இணையங்கள் தான் என புகழ்ந்து தள்ளினார். தேர்தலில் ஆதரவாளர்களைப் பெற பேஸ்புக் மற்றும் ட்விட்டர் இணையதளங்களையே தான் பயன்படுத்த விரும்புவதையும் வுசரனநயர பகிரங்கமாக அறிவித்தார்.

இதையடுத்து 2008 இல் நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் ஒபமாவின் பாணியை ஜஸ்டின் பின்பற்றி வெற்றியடைய முயற்சிக்கிறாரோ என்ற ஐயம் மக்களிடத்தில் உண்டாகியுள்ளது.

பூஞ்சைக் காளான்களும், மூட்டைப் பூச்சிகளும் சமுதாய வீடுகளில் வசிக்கும் மக்கள் குமுறல்



பல வருடங்களாக செப்பனிடப்படாமல் ஆங்காங்கே உடைந்திருக்கும் ரொறொன்ரோ மேற்குப் பகுதி சமுதாய வீடுகளில் பூஞ்சைக் காளான்களும், மூட்டைப் பூச்சிகளும் அளவுக் கதிகமாய் காணப்படுவதால் தங்களால் வசிக்க முடியவில்லை என குமுறத் தொடங்கியுள்ளனர் இந்த வீடுகளில் தற்போது வசித்து வரும் மக்கள். உண்மை நிலையை அறிந்து கொள்ள காவெல் அவென்யூவில் உள்ள சமுதாய வீடுகள் சிலவற்றிற்கு நேரில் சென்ற போது கடந்த பல மாதங்களாகவே செப்பனிடும் பணிகள் எதுவும் நடைபெறாததால் வீடுகளில் உள்ள சுவர்களின் நிலையே மிக மோசமாக இருக்கும் அவல நிலையைக் காண முடிந்தது.

இது தொடர்பாக காவெல் அவென்யூவில் வசிக்கும் மக்கள் சிலரிடம் பேசிய போது, வீடுகளைத் தட்டுவதற்கும் , சாளரங்களை மாற்றுவதற்கும் கூட தங்களுக்கு பயமாக இருப்பதாகவும் , எந்த வேலையிலாவது கை வைத்தால் ஒட்டு மொத்த சுவரே இடிந்து விடும் அளவிற்கு நிலைமை மோசமாக இருப்பதாகக் கூறுகின்றனர். இது போன்ற மோசமான நிலையுள்ள வீட்டில் தான் இது வரையிலும் வசித்ததில்லை எனக் கூறுகிறார் காவெல் அவென்யூ சமுதாய வீடுகளில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குடியேறிய பெண்மணி ஒருவர்.

இனியாவது ரொறொன்ரோ சமுதாய வீட்டு வசதி வாரியம் தங்களின் நிலையை கண்டு கொள்ளுமா என்பதே ஒட்டுமொத்தமாக இந்த வீடுகளில் வசித்து வரும் அனைத்து மக்களின் ஏக்கமாகவும் உள்ளது.

றொறன்ரோவில் உணவுத் திருவிழா




ரொறொன்ரோவில் ஆண்டுதோறும் வழமையாக கொண்டாடப்படும் உணவுத் திருவிழாவில் இந்த வருடம் கறிச்சாற்றினை (சூப்) நீங்கள் சுவைத்துப் பார்க்கலாம். ஒக்டோபர் 21, 11 a.m. முதல் 4 p.m வரையிலும் ரொறொன்ரோ Woodbine பார்க்கில் நடைபெறவுள்ள இந்த விழாவில் 120 கனடிய தலைமை சமையற்காரர்கள் பல விதமான சூப்புக்களை தயாரித்து உங்களுக்கு வழங்க உள்ளார்கள். சூப் திருவிழாவிற்கு பார்வையாளராக சென்று வர கட்டணம் ஏதுமில்லை. ஆனால் மூன்று கிண்ணம் கறிச்சாற்றினை பருக நீங்கள் $10 கட்டணமாக செலுத்தியாக வேண்டும்.

கறிச் சாற்றுக்கான கிண்ணம், கரண்டி, கைதுடை துண்டு ஆகியவற்றை கொண்டு வர வேண்டியதும் உங்கள் பொறுப்பே. கடந்த ஆண்டில் இது போன்று பிரமாண்டமான உணவுத் திருவிழா நடத்தப்பட்டதில் 28,000 பேர் கலந்து கொண்டனர். இந்த வருடம் நடக்கவுள்ள விழாவில் ரொறொன் ரோவின் மிகப் பிரபலமான தலைமை சமையற்காரர்களில் ஒருவரான ரவி கனகராஜாவின் கைமணத்தில் உருவாகும் கறிச்சாறு முக்கிய இடத்தினைப் பிடிக்கும் என நம்பப்படுகிறது.

இவர் Adelaide St. W. Queen St. W. and Dundas St. W ஆகிய இடங்களில் ரவி சூப்ஸ் என்ற பெயரில் உணவகங்களை நடத்தி வருகிறார். Red Curry Corn Chowder என்பது ரவி தயாரித்து விற்பனை செய்து வரும் கறிச்சாற்றில் மிகவும் பிரபலமான் ஒன்று.

சர்ச்சைக்குள்ளான கிறிஸ்தவ மத போதகர் டெர்ரி ஜோன்ஸ் கனடா வந்தாரா ? - வலுக்கிறது சர்ச்சை



இஸ்லாமியர்களின் புனித நூலான குரானின் நகலை எரிக்கப் போவதாய் அறிவித்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவரும் , கிறிஸ்தவ பயங்கரவாதி என இஸ்லாமியர்களால் வருணிக்கப் பட்டவருமான மத போதகர் டெர்ரி ஜோன்ஸ் கனடா வந்ததாக வெளியாகியுள்ள தகவல்கள் கனடாவில் வசிக்கும் இஸ்லாமிய மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. வியாழனன்று ப்ளோரிடாவிலிருந்து கனடா வந்த பாதிரியார் டெர்ரி ஜோன்ஸ் மீண்டும் கனடா – அமெரிக்க எல்லை வழியாக நாடு திரும்பியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின. ஆனால் தான் கனடாவிற்கு வரவில்லை என மறுத்துள்ளார் டெர்ரி ஜோன்ஸ்.

இதனிடையே பாதிரியார் கனடா வந்து விட்டு ரகசியமாக திரும்பிச் சென்றதால் தாங்கள் எமாற்றமடைந்துள்ளதாகவும் , அவர் துணிச்சலுடன் மக்களைச் சந்தித்து குரானை எரிக்க நினைத்தது ஏன் என விளக்கமளித்திருக்க வேண்டும் என ஒரு சாரார் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதனிடையே குயின்ஸ் பார்க்கில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொள்ளவே பாதிரியார் டெர்ரி ஜோன்ஸ் கனடா வந்தார் என்ற தகவல்களும் வெளியாகியுள்ளதால் பாதிரியார் கனடா வந்த விடயம் உண்மைதானா என்பதே தற்போது பெரும் சர்ச்சையாக மாறியுள்ளது.

$3 பில்லியன் செலவில் அட்டகாசமான புதிய காசினோ உருவாகப் போகிறது ரொறொன்ரோவில்!!



ரொறொன்ரோ மாநகர மாநாட்டு மையத்தின் சீரமைப்பு பணிகளுக்காக $3 பில்லியன் செலவு செய்வதென முடிவாகியுள்ளது. புதிய உல்லாச விடுதி , பொழுதுபோக்கு பூங்காக்கள் , இரண்டு வானளாவிய குடியிருப்பு மற்றும் அலுவலக கட்டிடங்களுடன் பிரமாண்ட காசினோ மையத்தையும் சேர்த்து புதிதாக உருவாக்குவதற்கு திட்டங்கள் தயாராக உள்ளன. இந்த மையம் உருவாக்கப்பட்டு விட்டால் மாநகராட்சிக்கு ஆண்டொன்றுக்கு $50 மில்லியன் சொத்து வரி வருமானமாக கிடைக்கும். இது தவிரவும் லாபத்தில் பங்குத் தொகையாக பல மில்லியன்களையும் ரொறொன்ரோ மாநகராட்சி பெறக் கூடும் எனத் தெரிகிறது.

Oxford Properties குழுமம் இதனை செய்யவிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. காசினோ மையங்களை மீண்டும் உருவாக்குவதில் மாநகர மக்களிடையே சர்ச்சை நிலவுவதால் இந்த பணித்திட்டத்தினை காசினோ மையங்கள் இல்லாமல் பிரமாண்டமாக செய்ய முடியாதா என்ற கேள்விகளும் எழுப்பப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான கேள்விகளுக்கு நேற்று பதிலளித்த Oxford Properties குழும கனடிய பிரிவின் துணை நிர்வாகத் தலைவர் மைகேல் கிட், காசினோ இல்லாமல் புதிய மையத்தை நினைத்துப் பார்ப்பதே வீணானது எனக் கூறினார். காசினோ ஏற்படுத்தப்படா விட்டால் பெரிய அளவிற்கு லாபமிருக்காது என்பதையும் அவர் குறிப்பிட்டார்.

ரொறொன்ரோ போக்குவரத்துக் கழக பராமரிப்பு பணிகளை தனியார் நிறுவனங்களுக்கு தாரை வார்ப்பது ஆபத்தில் முடியும் - மிரட்டுகிறார் கினியர்



ரொறொன்ரோ போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளையும், இரு பணிமனை களையும் பராமரிக்கும் பொறுப்பு தனியார் நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் விடப்பட உள்ளதான தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து பல ஊழியர் சங்கங் கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தன. ஆனால் இவற்றிற்கெல்லாம் ஒரு படி மேலே போய் Amalgamated Transit Union (ATU) Local 113 ஊழியர் சங்கத்தின் தலைவரான பொப் கினியர், பராமரிப்பு பணிகளை தனியார்க்குத் தாரை வார்க்கும் போக்குவரத் துக் கழக முடிவுகளால் குற்றச் செயல்களும், தீவிரவாத அச்சுறுத் தல்களுமே அதிகரிக்கும் என நேற்று ஊடகங்களிடம் அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

பராமரிப்பு பணிகளை நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப் படையில் விடுவதனால் இப்படியெல்லாம் நடக்க வாய்ப்பில்லை என்பதே உண்மை என்ற போதிலும் கூட ஊழியர் சங்க மொன்றின் தலைவர் இது போன்ற புரளிகளைக் கிளப்பி விட வேண்டிய அவசியமென்ன என ஆராய்ந்ததில் எதிர் வரும் டிசம்பர் மாதம் நடைபெற விருக்கும் ஊழியர் சங்கத் தேர்தலை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளவே இவ்வாறு பேசி வருகிறார் என்பது தெரிய வந்துள்ளது.

எனக்கு வருத்தமில்லை!
கால்பந்து வீராங்கனை சின்க்ளேர்



கனடிய பெண்கள் கால்பந்து குழுவின் தலைவர் கிறிஸ்டின் சின்க்ளேர் அடுத்த நான்கு போட்டிகளிலில் விளை யாடத் தடைபோடப்பட்டுள்ளது. இது குறித்து சர்வ தேச கால்பந்து சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் "போட்டி முடிந்தப் பிறகு போட்டி நடுவரிடம் அவர் நடந்துக் கொண்ட மரியா தைக் குறை வான விதத்துக்காக இந்த் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித் துள்ளது.

"இதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இதில் எனக்கு வருத்தமில்லை." என்று சொல்லியிருக்கிறார் சின்க்ளேர். லண்டனில் நடந்த ஒலிம்பிக்ஸ் போட்டிகளின் போது அரையிறுதி போட்டியில் அமெரிக்கா வுடனான அரையிறுதி போட்டியில் 4–3 என்ற கோல் வித்தியாசத்தில் கனடா தோற்று விட்டது. அதில் கனடாவின் கோல்கள் அனைத்தையும் சின்க்ளேர்தான் அடித்தார். இரண்டு அணிகளும் சமமான நிலையில் இருந்து பிறகு போட்டியின் கூடுதல் நேரத்தில் ஒரு கோல் கூடுதலாக அடித்து அமெரிக்கா வென்றது.

"நாங்கள் தோற்றது போன்ற உணர்வு எங்களிடம் இல்லை. வெற்றி எங்க ளிடமிருந்து பிடுங்கப்பட்டது போன்று இருந்தது. இது போன்ற மிக முக்கியமான ஆட்டத்தில் நடுவரின் செயல்பாடு சரியாக இல்லை. போட்டியின் துவக்கத்திலேயே ஒரு முடிவை தீர்மானித்து வைத்துவிட்டது போல் அவர் செயல்பட்டார்" என்று சின்க்ளேர் தெரிவித்தார்.

போட்டியின் முடிவு முன்பே நிச்சயிக்கப்பட்டது என்று கருதுகிறீர்களா? என்ற கேள்விக்கு, "இல்லை. ஆனால் அமெரிக்காதான் வெல்லும் என்ற எண்ணத்துடன் நடுவர் போட்டிக்கு வந்தது போல் இருந்தது" என்று பதிலளித்தார் சின்க்ளேர். இந்தத் தடையினால் கனடாவின் அடுத்த நான்கு போட்டிகளில் சின்க்ளேர் ஆட மாட்டார்.

நீங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய காலம் இது!



சில நாட்களுக்கு முன்பு நிதி யமைச்சர் ஜிம் ஃபளாஹர்டி ஐரொப்பியாவின் நிதிநிலைமை பற்றி பேசியிருந்தார். ஐரோப்பா விற்கு இருக்கும் கடன் சுமை நிஜமானது ஆபத்தானது என்று குறிப்பிட்டிருந்தார். அவர் மட்டு மல்ல பலரும் இந்தக் கருத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

கனடாவில் இது குறித்து கவலைப்படாமல் இருப்பது நல்லதல்ல. "உலக அளவில் பொருளாதார மந்த நிலை அதிகரிக்க அதிக வாய்ப்பு இருக்கிறது" என்று சர்வதேச நிதி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஐரோப்பாவில் நிகழும் இந்த நிதிப் பிரச்சனைகளை சமாளிக்க தனிப்பட்ட கனடியரால் எதுவும் செய்ய இயலாது. ஆனால் நீங்கள் இந்த கால கட்டத்தில் ஜாக்கிரதையாக இருந்துக் கொள்ளலாம்.

திடிரென்று உங்கள் கடன்களின் வட்டி விகிதம் அதிகரித்தால் என்ன செய்வீர்கள்?

இன்னொரு பொருளாதார மந்தத்தை கனடாவால் தாங்க இயலுமா என்பது கேள்விக் குறிதான் என்று சர்வதேச நிதி நிறுவனத்தின் தலைமை பொறுப்பாளர் கிறிஸ்டின் லாகார்ட் தெரிவித்துள்ளார்கள். கனடியர்கள் பலர் கடனில் இருக்கிறார்கள். இந்த சூழலில் இன்னொரு பொருளாதார மந்தம் பெரிய ஆபத்தை விளைவிக்கும்.

அதனால் கடன்களைக் குறையுங்கள். கனடா வங்கியின் ஆளுநர் மார்க் கார்னே சொல்லுவது போல், கடன் அட்டையை ஒளித்து வைத்து விட்டு கடனை அடையுங்கள். கடன் அட்டைகளில் அனுபவம் பெற்ற அமெரிக்க நிறுவனம் ட்ரான்ஸ் யுனியன், கனடியர்கள் சராசரியாக 26,000 டாலர்கள் கடன் அட்டையில் கடன் வைத்திருக்கிறார்கள் என்ற தகவலைத் தருகிறது. இது சென்ற வருடத்தைவிட 1,200டாலர்கள் அதிகமாம்.

ஆனால் இந்த கணக்கெடுப்பு சரியா என்ரு கேள்வி எழுந்துள்ளது. கனடாவை சேர்ந்த ஆர்பிசி நிறுவனம் நடத்திய தொலைபேசி கணக்கெடுப்பில் சராசரியாக கனடியருக்கு 13,141 டாலர் கடன் இருப்பதாக தெரியவந்துள்ளது. இந்த கணக்கெடுப்பில் தெரிந்த மற்றொரு மகிழ்ச்சிக்குரிய சங்கதி, 26 சதவீத கனடியர்களுக்கு கடன் எதுவும் இல்லை என்பது. கிறிஸ்மஸ் வர இன்னும் இரண்டு மாதமே இருக்கிறது. எப்படி செலவு செய்யப் போகிறீர்கள்? கடனிலா கையிலிருக்கும் காசிலா?

சந்தா கட்டினால்தான் படிக்க முடியும்!



வட அமெரிக்க பத்திரிகைகளைப் போல தி க்ளோப், மெயில் ஆகிய பத்திரிகைகளை இணையத்தில் படிக்க கட்டணம் வசூலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. க்ளோப்பின் இணைய தளத்தை முழுமையாக பயன்படுத்த மாதம் இருபது டாலர் சந்தா செலுத்த வேண்டும். இந்த சந்தா திட்டம் அக்டோபர் 22தேதி முதல் அமல்படுத்தப் படுகிறது.

"வருமானத்தை பெருக்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஃபைனான்ஷியல் டைம்ஸ் ஆஃப் லண்டன், நியுயார்க் டைம்ஸ், வால் ஸ்ட்ரீட் ஜர்னல் போன்ற பத்திரிகைகளின் சந்தா செயல்பாடுகளை ஆழ்ந்து கவனித்தப் பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டது" என்று க்ளோப் மற்றும் மெயில் பத்திரிகைகளின் வெளியீட்டாளர் பிலிப் க்ராவ்லி தெரிவித்துள்ளார்.

"கைபேசிகளின் பெருக்கம் இணையத்தின் தேவையை அதிகரித்துள்ளது. இப்போது வரும் அதிநுட்ப கைப்பேசி வழியாகவே செய்தித் தாள்களையும் பத்திரிகைகளையும் படித்து விடுகிறார்கள்.. இதற்கு நல்ல உள்ளடக்கம் தேவைப்படுகிறது" என்று அவர் மேலும் கூறினார்.

இதற்கு முன்பும் க்ளோப் இணையத்தில் பணம் வசூலிக்க முயன்றது. மிகப் பிரபலமான எழுத்தாளர்களை எழுத வைத்து நல்ல உள்ளடக்கத்தை தந்தது. ஆனால் அத்தனை வெற்றி பெறவில்லை. "ஆனால் இந்த முறை அப்படியல்ல, கைப்பேசி கலாச்சாரம் எல்லாவற்றையும் மாற்றிவிட்டது.இப்போது மக்கள் பணம் தர தயாராய் இருக்கிறார்கள்" என்கிறார் க்ராவ்லி. இந்த பத்திரிகைகளைத் தொடர்ந்து ரொறான்ரோ ஸ்டார் போன்ற கனடிய பத்திரிகைகளும் இணையத்தில் சந்தா வசூலிக்கலாமா என்று தீவிரமாய் யோசித்து வருகின்றன.

இரத்தாகிறது மாதாந்திர பயணச் சீட்டுக்கள்!



கோ ட்ரான்சிஸ்ட்டின் மாதாந்திர பயணச் சீட்டுக்கள் வரும் வருடத்திலிருந்து இரத்து செய்யப்படுகின்றன. டிசம்பர் மாதம் வரைதான் இந்த பயணச்சீட்டுக்கள் தரப்பட்டிருக்கின்றன. இனி பயனிகள் தினசரி பயணச் சீட்டு வாங்க வேண்டும் அல்லது ப்ரெஸ்டோ மின்னனு பயண அட்டையைப் பெற வேண்டும்.

கடந்த ஆகஸ்டு மாதம் தான் மிகப் பிரபலமாக இருந்த 10 சவாரி மற்றும் இரண்டு சவாரி பயணச்சீட்டுக்களை ரத்து செய்து கோ அறிவித்திருந்தது. பெரும்பாலான பயணிகள் மாதாந்திர பயணச்சீட்டுக்களிலிருந்து பெரெஸ்டோ அட்டைகளுக்கு மாறிவிட்டதாக கோ நிறுவன அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

கடந்த முப்பது வருடங்களாக மாதந்திர பயண அட்டைகள்தாம் பயணிகளிடத்தில் மிகப் பிரபலமாக இருந்தது. இப்போது கிட்டத்தட்ட 35000 ப்ரெஸ்டோ அட்டை உபயோகிப்பவர்கள் இருக்கிறார்கள், தற்போது மாதந்திர அட்டை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை 45 சதவீதம் குறைந்துவிட்டது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாதாந்திர பயண சீட்டுக்களை காட்டினாலே போதும் ஆனால் ப்ரெஸ்டோ மின்னனு அட்டைகளை ரயிலிலோ பேருந்திலோ பயன்படுத்துபவர்கள் அங்குள்ள மின்னனு கருவியில் காட்ட வேண்டும். இந்த அட்டையை பதிவு செய்து வைத்துக் கொள்ளலாம். தொலந்துப் போனால் மாற்று அட்டை பெற்றுக் கொள்ளலாம்.

காணாமல் போன நன்கொடைகள்

ரொறொண்ரோவில் யுனைட்டர் வே நிறுவனத்துக்கு அளிக்கப்பட்ட நன்கொடைகளில் 50,000 டாலர்களை காணவில்லை என்ற தகவல் கிடைத்துள்ளது. இது குறித்து விசாரணை நடந்து வருகிறது. வழக்கமாய் இந்த நன்கொடைகளின் மூலம் பயன்பெறும் நபர் இந்த வருடம் பணம் கிடைக்கவில்லை, எப்படியென்று விசாரித்தபோது நன்கொடைகள் பல காணவில்லை என்பது தெரியவந்துள்ளது. இந்தத் திருட்டு கடந்த மூன்று நான்கு வருடங்களில் நடைப்பெற்றிருக்க வேண்டும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நன்கொடை நிதி பல்வேறு பொதுச் சேவை நிதித் திரட்டு நிகழ்ச்சிகளின் மூலம் சேகரிக்கப்பட்டவை. இப்படியொரு விசாரணை நடந்து வருவதை மட்டும் ஒப்புக் கொண்ட நகர செய்தித் தொடர்பாளர் ஜாக்கி டிசொசா, அது குறித்த மேல் விவரங்களை தெரிவிக்க மறுத்துவிட்டார்.

"இது போன்ற சூழல்களில் காவல்துறையின் உதவி கோரப்படும். இந்த சம்பவத்திலும் காவல் துறை உதவி பெறப்படும்" என்று அவர் தெரிவித்தார்.

ஆகா! 580,000 டாலர் காரில் ஒரு சவாரி!

உலகின் விலை உயர்ந்த கார்களில் இதுவும் ஒன்று. அரை மில்லியன் டாலர்களுக்கு மேல். பிரசித்திப் பெற்ற ரோல்ஸ் ராய்ஸ் குழுமத்திலிருந்து வெளிவந்திருக்கிறது. பெயர் ட்ராப் ஹெட் கூப்பே, ஃபேண்டம் வரிசை. ரோல்ஸ் ராய்ஸ் பிரிட்டிஷ் குடும்பத்தை சேர்ந்தது. இப்போது அந்த நிறுவனத்தை ஜெர்மனியின் பிஎம்டபுள்யு நிறுவனம் முழுமையாக வாங்கிவிட்டதால் ஜெர்மானிய ரத்தமும் இதில் கலந்து முன்பைவிட இன்னும் சிறப்பாக இருக்கிறது.

டயரின் அளவு 21அங்குலம். 10 குறுக்கு கம்பிகளுடன் அழகாக தெரிகிறது. நீளம் 221 அங்குலம். சற்று நீளமான வாகனம்தான். சாலையில் பயணிக்கும் போது அனைவர் கண்களும் இதன் மேல்தான் இருக்கும். நகரத்தின் பரபரப்பான போக்குவரத்து நெரிசல் மிக்க சாலைகளில் மெது வேகத்தில் பயணிக்கும்போது சிறு உதைப்பு கூட இல்லை. வெண்ணெயில் வழுக்குவது போல் செல்கிறது.

ஆனால் நீண்ட நெடுஞ்சாலைகளில் வேகம் கொள்ளும்போது சீறும் சிறுத்தையாக மாறிவிடுவது மிகப் பெரிய ஆச்சர்யம். இதன் இன்னோரு ஆச்சர்யம் எந்த வேகத்திலும் பிரேக்கை அழுத்தினால் விரும்பிய இடத்தில் நிற்கிறது. இன்றைய வாகனங்களுக்கு அத்தியாவசியமான ஒன்று இந்த பிரேக் அமைப்பு.

இந்த கண் கவரும் வாகனத்தின் இன்னொரு சிறப்பு நமக்கு எந்த வண்ணம் பிடிக்கிறதோ அந்த வண்ணத்தில் வாகனத்துக்கு வண்ணம் பூசி தருகிறார்கள். ஏறத்தாழ 44,000 வண்ணங்கள் இருக்கிறதாம். மலைப்பாக இருக்கிறதல்லவா? அதுதான் ரோல்ஸ் ராய்ஸ். வாகனத்தை நமக்கு ஏற்றவாறு நமக்கு தேவையான வசதிகளோடு அமைத்து தருகிறார்கள். இருக்கை மேல் போட்டிருக்கும் தோலாடை கையாயால் தைக்கப்பட்டது. காருக்குள் கால் வைத்தால் எந்தவித வெப்பத்தையோ அதிர்வையோ உணர இயலாது. உள்ளுக்குள் வெளி சத்தம் எதுவும் கேட்பதில்லை. இது தனி உலகம். ரோல்ஸ் ராய்ஸின் தொழில்நுட்ப உலகம்.

"எஸ்" பொத்தானை அழுத்தினால் கார் உயிர் பெறுகிறது. கியரை போட்டால் வண்டி நகருகிறது. ஆனால் ஒரு சத்தம் இல்லை. சில நொடிகளிலேயே வேகம் எடுத்துவிடுகிறது. என்ன வேகத்தில் போகிறோம் என்பதை நம்மால் உணர இயலவில்லை என்பதால் கவனமாக இருக்க வேண்டியிருக்கிறது. நம்மையும் அறியாமல் மிக வேகமாக வண்டியை செலுத்தக் கூடிய அபாயம் இருக்கிறது.

ஒட்டுநர் இருக்கையை பதினெட்டு விதங்களில் நமக்குஏற்றவாறு மாற்றியமைத்துக் கொள்ளலாம். அதே போல் காரை பின்பக்கமாக செலுத்தி நிறுத்த முற்படும்போது காரில் பொருத்தப்பட்டிருக்கும் புகைப்படக் கருவிகள் காருக்கு குறுக்கே தடங்கல் இருக்கிறதா என்று நமக்கு முன்னால் இருக்கும் காணொளியில் காட்டி விடுகிறது. அதனால் இந்த வாகனத்தை எந்த இடத்திலும் யார் உதவியுமில்லாமல் நிறுத்தி விடலாம். ஆக இது ஒரு உன்னதமான வாகனம், மிக உயர்ந்த விலையில்.

வான் வர்த்தகம், வளம் கொடுக்கும் வாய்ப்புகள்!



"இந்தியாவின் நவீன திட்டங்களையும் அந்நிய முதலீட்டிற்கான புதிய வாய்ப்புகளையும் சரிவர பயன்படுத்தினால் கனடாவின் வான் வர்த்தகம் பெருமளவு உயரவும் புதிய வேலைகள் உருவாகவும் வாய்ப்புகள் கிடைக்கும்" என்று கனடிய இந்திய வர்த்தக சபையின் தலைவர் ரானா சர்க்கார் தெரிவித்துள்ளார்.

உலகியே மிகப் பெரிய ஜனநாயக நாடு இந்தியா. இப்போது அந்தப் பிராந்தியத்திலிருக்கும் மற்றொரு பெரிய நாடான சீனாவுடனும் பிற ஆசிய நாடுகளுடனும் வர்த்தக உலகில் போட்டிப் போட்டுக் கொண்டு இருக்கிறது. பல பில்லியன் டாலர்களை உள்கட்டமைப்பு துறையில் முதலீடு செய்துக் கொண்டிருக்கிறது. 2020ஆம் வருடத்தில் உலகின் மிகப் பெரிய ஐந்து வான் வர்த்தக நாடுகளில் ஒன்றாக இந்தியா மாற வாய்ப்பிருக்கிறது.

"இந்த வர்த்தகத்தில் நமக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று கருதுகிறேன். வான் வர்த்தகத்தை பொறுத்த வரையில் அவர்கள் ஒரே இடத்திலிருந்து எல்லாவற்றையும் பெறப் போவதில்லை. பல இடங்களிலிருந்துதான் அவர்களின் தேவையை பூர்த்தி செய்துக் கொள்வார்கள். அந்த வர்த்தக தொடர்புகளில் நாமும் இணைந்துக் கொள்வது மிக முக்கியம்" என்று சொல்லியிருக்கிறார் ரானா.

கனடாவின் வான் வர்த்தகம் வருடத்துக்கு 22 பில்லியன் டாலர்கள் அளவில் இருக்கிறது. 80,000பேருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட நானூறு நிறுவனங்கள் இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. புது விமானங்கள் தயாரித்தல், விமான நிலையம் நிர்மானித்தல், விமான ஓட்டி பயிற்சி நிலையங்கள் என பல வித தொழில்கள் இந்த வர்த்தகத்தில் இருக்கின்றன.


இந்தியாவுக்கான கனடாவின் ஏற்றுமதி 29 சதவீதம் உயர்ந்து 2.6 பில்லியன் டாலர்களுக்கு வந்திருக்கிறது. இதில் விமான வர்த்தகம் நான்காவது நிலையில் இருக்கிறது. இரு நாடுகளுக்கிடையே 5.1 பில்லியன் டாலர் அளவுக்கு இப்போது வர்த்தகம் நடைபெறுகிறது. இது 2015ல் பதினைந்து பில்லியனாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் விமான நிலையங்கள் கட்டுமானப் பணி முழுவேகத்தில் நடந்துக் கொண்டிருக்கின்றன. புதிதாய் பத்து விமான தளங்கள் சிறு நகரங்களில் அமைக்கப்படுகின்றன, மேலும் 35 விமான நிலையங்களை விரிவுப்படுத்தும் வேலைகளும் நடந்துக் கொண்டிருக்கின்றன. 2020ஆம் ஆண்டு விமானப் பயணிகளின் எண்ணிக்கை நான்கு மடங்காக உயர்ந்து 160 மில்லியனைத் தொட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது இந்தியாவில் விமான சேவையொட்டிய பயிற்சிகள், விமான கட்டுப்பாட்டு சேவைகள், விமான பராமரிப்பு மற்றும் அதற்குரிய படிப்புகளுக்கு மிகப் பெரிய தேவை இருக்கிறது. இந்தத் தேவையை கனடாவால் பூர்த்தி செய்ய இயலும்.

"இந்தியா வான் வர்த்தகத்தில் உயர உயர கனடாவுக்கும் வாய்ப்புகள் அதிகரித்துக் கொண்டே இருக்கும்." என்று கூறுகிறார் ரானா சர்க்கார்.

பிடிபட்டார் முன்னாள் நகரசபை உறுப்பினர்



ஒஷாவாவின் நகர சட்ட ஆலோசகர் டேவிட் பாட்ஸ் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டார். அவரைக் கடத்தியது முன்னாள் நகர சபை உறுப்பினர் ரோபர்ட் லட்சிக். விடியற்காலம் இரண்டு மணியளவில் துப்பாக்கி முனையில் அவரை காரில் ஏற்றி காரிலேயே சுற்றியிருக்கிறார்கள்.

ஒரு சந்தர்ப்பம் கிடைத்தபோது கடத்தியவனிடமிருந்து தப்பித்திருக்கிறார் சட்ட ஆலோசகர் டேவிட். தகவல் அறிந்ததும் காவல்துறை ரோபர்ட் லட்சிக்கை பிடிக்க முயன்றது. எந்தவித அசம் பாவிதமும் நடக்காமல் ரோபர்ட்டே காவல்துறை யினரிடம் சரணடைந்து விட்டார். இந்தத் தகவல்களை ஒஷாவின் முன்னால் மேயர் ஜான் கிரே உறுதி செய்தார்.

3000 டொலருக்கு விலை போன நாட்டு ரகசியங்கள்



கனடிய கப்பல் படையில் உளவு அதிகாரியாக இருந்தவர் ஜெ∴ப் டெலிஸ்ல். கடன் தொல்லை, மனைவி பிரிவு என இவருக்கு தனிப்பட்ட வாழ்க் கையில் ஏகப்பட்ட பிரச்ச னைகள். 2007ஆம் ஆண்டு இவர் ஒரு அநியாய காரியத்தை செய்தார். ஒட்டாவாவிலுள்ள ரஷ்ய தூதரகத்துக்குச் சென் றார். அங்கிருந்த அதிகாரி ஒருவரிடம் தன்னைப் பற்றிய விவரங்களை சொன்னார். பணம் தந்தால் கனடிய அதி ரகசியங்களை எடுத்துத் தருவதாக பேரம் பேசினார். ரஷ்ய அதிகாரிகள் அவர் பெயர், முகவரியைக் குறித்து வைத்துக் கொண்டு விசாரித் திருக்கீறார்கள். பிறகு அவரைத் தொடர்புக் கொண்டு தங்களுக்கு பணியாற்றுமாறு கூறியிருக்கிறார்கள்.


ஜெ∴ப் கப்பல் படையின் முக்கியமான பகுதிகளில் பணிபுரிந்ததால் அவர் வழியாக பல ராணுவ ரகசியங்கள் சென்றன. அவர் கிழக்கு கடற்கரை பகுதியில் இருந்ததால் நட்பு நாடுகளான கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியுசிலாந்து ஆகியவற்றிலிருந்து வரும் செய்திகளை கையாளும் பொறுப்பு ஜெ∴ப்பிடம் இருந்திருக்கிறது, அதனால் கிடைத்த அத்தனை தகவல்களையும் ரஷ்ய அதிகாரிகளிடம் கொடுத்திருக்கிறார்.

கிட்டத்தட்ட நான்கு வருடங்கள் இந்த துரோகம் நடந்திருக்கிறது. இதைக் கண்டுபிடித்த காவல் துறை சென்ற ஜனவரி பதிமூன்றாம் தேதி கைது செய்தது. இப்போது நீதிமன்றத்தில் வழக்கு நடந்துக் கொண்டிருக்கிறது. தான் செய்த குற்றங்களையெல்லாம் ஒப்புக் கொண்டிருக்கிறார் ஜெ∴ப். ஆனால் அவரது வக்கீல், ஜெ∴ப் கையாண்ட தகவல்கள் நாட்டுக்கு தீங்கு தராதவை அதை ரஷ்யர்களுக்கு கொடுத்ததால் தீங்கு நிகழவில்லை என்று வாதிட்டார்.

முதல் சில மாதங்களுக்கு ஜெ∴ப்புக்கு மாதம் ஐயாயிரம் டாலர்கள் தந்துக் கொண்டிருந்த ரஷ்யர்கள் பிறகு அந்தத் தொகையை மூவாயிரம் டாலர்கள் என குறைத்திருக்கிறார், அந்தத் தொகைக்கும் நாட்டு ரகசியங்களை விற்றிருக்கிறார் ஜெ∴ப்.

கட்டாயப்படுத்தினார் லான்ஸ்

சைக்கிள் சாதனையாளர் மீது குவியும் புகார்கள்



லான்ஸ் ஆர்ம்ஸ்ட்ராங்க். உலகப் புகழ் பெற்ற அமெரிக்க சைக்கிள் பந்தய வீரர். சில மாதங்களுக்கு முன் பலரது ஆதர்ச நாயன். புற்று நோய் தாக்கப்பட்டு அதனுடன் போராடி வென்ற கதை உலகப் பிரசித்திப் பெற்றது. ஆனால் இப்போது தவறான காரணங்களுக்காக செய்தி களில் வந்துக் கொண்டிருக்கிறார்.

போட்டிகளில் கலந்துக் கொள்ளுமுன் போதை ஊக்க மருந்துகளை பயன்படுத்தினார் என்பது ஆதாரப் பூர்வமாக தெரியவந்துள்ளது. அதனால் இப்போது அவருக்கு ஆயுட்கால தடை விதிக்கப்பட்டுள்ளது. 1998க்குப் பிறகு அவர் வென்ற பட்டங்கள் எல்லாம் செல்லாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தான் மட்டுமில்லாமல் தன்னுடைய குழுவினரையும் ஊக்க மருந்து எடுத்துக் கொள்ளச் சொல்லி கட்டாயப்படுத்தினார் என்ற புகார் தற்போது எழுந்துள்ளது. அவரது அணியைச் சார்ந்த பதினோரு பேர் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியிருக்கிறார்கள். இந்த மருந்துகளை மிகுந்த சாமர்த் தியத்துடனும் யாரும் கண்டுபிடிக்க முடியாத அளவு திறம்பட கொடுத்திருக்கிறார் லான்ஸ்

நகரப் பெண்களே உஷார்

உங்களைத் திருட்டுத்தனமாய் படமெடுக்கிறார்கள்



க்ரீப்பர் கம்∴போர்ட்ஸ் என்று ஒருவன் றொரான்ரோ நகரில் உலவுகிறான். அவன் பெண்கள் அறியாத போது அவர்களைத் திருட்டுத்தனமாக படமெடுத்து இணையதளங்களில் வெளியிடுகிறான். – இப்படியொரு எச்சரிக்கையை ஒரு றொரான்ரோ பெண் இணையதளம் ஒன்றில் வெளியிட்டிருக்கிறார். அதற்கு காரணம் இருக்கிறது. ரீடிட் எனப்படும் வலைதளத்தில் பொது இடங்களில் பெண்கள் நடமாடுவதை கவர்ச்சிகரமாய் படமெடுத்து "க்ரீப்ஷாட்ஸ்" என்ற தலைப்பில் போடப்பட்டுவந்தது.

இதில் அதிகமாய் படங்களை வெளியிட்டது க்ரீப்பர்கம்∴போர்ட்ஸ் என்ற் நபர். இவர் பொது இடங்களில் தங்கள் பணிகளை செய்துக் கொண்டிருக்கும் பெண்களை அவர்கள் அறியாதபோது வக்கிரமான கோணங்களில் படமெடுத்து அதற்கு ஆபாசமான தலைப்புகளுடன் வெளியிட்டார். இதற்கு வந்ததும் தன் செயல்களை நியாயப்படுத்தி செய்தி அந்த இணைய தளத்தில் வெளியிட்டிருக்கிறார்.

"இந்தத் தளம் வக்கிரப் புத்தியுள்ளவர்களால் நிறைந்துதான் இருக்கிறது.ஆனால் நாங்கள் இதற்காக சில கட்டுப்பாடுகள் வைத்திருக்கிறோம் நிர்வாணப் படங்களை வெளியிடுவதில்லை, அவை பொது இடங்களில் எடுக்கப்படாமலிருந்தால். ஆனால் கடற்கரைகளில் அது போன்ற காட்சிகள் கிடைக்கின்றன, ஆனால் குளியலறை போன்ற இடங்களில் எடுக்கப்பட்ட படங்களை வெளியிடுவதில்லை. அது தனி மனித சுதந்திரத்தை மீறுவதாக இருக்கிறது" என்று எழுதியிருக்கிறார்.


இந்த இணையதளத்தில் இருக்கும் பெரும்பான்மையானபெண்களும் அந்தப் படங்களை வெளியிட்டவர்களும் அமெரிக்கர்கள் என்றாலும் இந்த க்ரீப்பர்கம்∴போர்ட்ஸ் றொரொன்ரோவைச் சேர்ந்தவர். அவர் இந்த நகரப் பெண்களைக் குறி வைக்கிறார். "இதில் பல ஆண்கள் தங்கள் மனைவி மற்றும் தோழிகள் அறைகளில் உறங்கும் படங்களை அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் நாங்கள் அந்தப் படங்களை வெளியிடவில்லை. காரணம் அது பொது இடத்தில் எடுக்கப்படவில்லை, கூடவே தனி மனித சுதந்திரத்துக்கு எதிரானது என்பதால்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இது போன்று பெண்கள் படங்களை வெளியிடுவதற்கு பல பெண்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இப்படி படங்களை எடுத்து வெளியிடுவது தவறில்லை என்று றொரான்ரோ காவல்துறை தெரிவித்துள்ளது. "பொது இடங்களில் மனிதர்களை படமெடுப்பதில் சட்ட மீறல் எதுவும் இல்லை. இதற்காக ஒருவரை குற்றம் சாட்ட முடியாது. ஆனால் பாலியியல் ரீதியாக வக்கிர உணர்வுடன் எடுக்கப்பட்ட படம் என்று தெரிந்தால் அதற்காக வழக்குப் போடலாம். ஆனால் இந்த இணையதளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் படங்களை வைத்து வழக்குப் பதிவு செய்ய இயலாது" என்று றொரான்ரோ காவல்துறை காவலர் டோனி வெல்லா தெரிவித்துள்ளார்.

ஒரு பூங்காவில் பெண்ணொருத்தி குனிந்து எதையோ எடுக்கிறாள். அதை பின்புறத்திலிருந்து படமெடுத்து வெளியிட்டு "இது பொது இடத்தில் கண்ட காட்சிதான். இது போன்ற அரிதான காட்சிகளைக் கண்டு மகிழ்ச்சிக் கொள்ளுங்கள்" என்று எழுதியிருக்கிறார் இந்த க்ரீப்பர்கம்∴போர்ட்ஸ். இந்த விவகாரம் இப்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

மன நோயாளிகளுக்கு சிகிச்சை கிடையாது

ஒரு அதிர்ச்சி தகவல்



பெரும்பான்மையான மன நோயாளி களுக்கும் போதைக்கு அடிமையானவர் களுக்கும் ஒண்டோரியோவில் உரிய சிகிச்சை தரப்படுவதில்லை என்று ஒரு ஆய்வுக் குறிப்பு சொல்லுகிறது. புற்று நோய் மற்றும் தொற்று நோய் பாதிப்பு களைவிட மன நோய் பாதிப்பு இந்த மாநிலத்தில் அதிகம் உள்ளது. ஆனால் அதற்குரிய சிகிச்சை போதுமானதாக இல்லை என்கிறது அந்த ஆய்வுக் குறிப்பு.

"மன நோயாளிகளைப் போல் மிகக் குறைந்த சிகிச்சையை சர்க்கரை நோயாளிகளுக்கு கொடுக்கப்பட்டிருந்தால் பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்திருப்பார்கள்" என்கிறார் இந்த ஆய்வுக் கட்டுரையை எழுதிய இணையாசிரியர் டாக்டர் பால் குர்டியாக். ஒண்டோரியாவின் பொது சுகாதார அமைப்பின் கீழ் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

"மன நலம் பாதிக்கப்பட்டவர்களில் அறுபது சதவீதத்தினருக்கு மேலும் போதைக்கு அடிமையானவர்களில் தொன்னூறு சதவீதத்தினருக்கு மேலும் சிகிச்சை கிடைக்காமல் தவிக்கிறார்கள்" என்கிறார் குர்டியாக்.

"இந்த நோய்களைப் பற்றி மக்கள் தவறான எண்ணங்கள் வைத்திருப்பதால் அதற்கான சிகிச்சை குறித்து அலட்சியமாய் இருக்கிறார்கள்" என்று குறிப்பிடுகிறார் மற்றொரு ஆசிரியர் டாக்ட ஜ/ர்கன் ரெம்.

புதிய தடைவழிப் பாதைகளுக்கான கட்டணம் நிர்ணயிப்பது குறித்த சர்ச்சையை மக்களிடமே விட்டு விட முடிவு



ரொறொன்ரோவில் புதிதாக உருவாக்கப்படவுள்ள போக்குவரத்து தடவழிப் பாதைகளுக்கு நிதி திரட்டும் விடயம் பெரும் சர்ச்சையானதையொட்டி இது குறித்து விவாதிக்க மாநகர முதல்வர் போர்டின் செயற்குழு உறுப்பினர்கள் நேற்று அவசர ஆலோசனையொன்றை நடத்தினர். இந்த ஆலோசனையின் போது மேயருக்கும் பிற உறுப்பினர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் முடிவை மக்களிடமே விட்டு விட்டுவது என இறுதியில் தீர்மானிக்கபப்ட்டது.

இதன்படி விற்பனை வரி, வருமான வரி, சுங்க வரி, சொத்து வரி உள்ளிட்ட 17 அம்சங்கள் தற்போது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் எந்த கட்டண முறையை அதிகப் படியான மக்கள் அங்கீகரிக்கின்றனரோ, அந்த முறைப்படியே கட்டணம் வசூலிப்பது என செயற் குழுவில் ஒரு மனதாக முடிவு செய்யப்பட்டு விட்டது.

விற்பனை வரி , வருமான வரி, சம்பளப்பட்டுயல் வரி, சுங்க வரி, எரிபொருள் வரி, வாகன பதிவுக் கட்டணம், அதிகப்படியான சொத்து வரி, வாகனம் நிறுத்தும் கட்டணம், அதிகரிக்கப்பட்ட அபிவிருத்திக் கட்டணங்கள், நில மாற்று வரி உள்ளிட்ட இவற்றில் எதனை அதிகரிப்பதன் மூலம் ரொறொன்ரோ போக்குவரத்து பணித்திட்டங்களை செயல்படுத்துவது என்ற கருத்துக் கணிப்பு ரொறொன்ரோ மாநகர மக்களிடம் விரைவில் எடுக்கப்பட்டு அதன் பின்னர் முடிவுகள் மேற்கொள் ளப்படும் எனத் தெரிகிறது.

ஹார்ப்பர் நிர்வாண ஓவியம் மீதான புகார் தள்ளுபடி

கடந்த மே மாதம் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் நிர்வாண நிலையில் ஓய்வெடுத்துக் கொண்டு இருப்பதைப் போன்ற புதிய ஓவியம் ஒன்று கிங்ஸ்டன் கலை மன்றத்தின் வருடாந்திர கலைக் கண்காட்சியில் இடம் பெற்றதால் பெரும் சர்ச்சை உண்டாகியது. ஸ்டீபன் ஹார்ப்பர் நிர்வாண நிலையில் ஓய்வெடுக்கும் நிலையில் தீட்டப்பட்டுள்ள இந்த ஓவியத்தில் அவரைச் சுற்றிலும் சிலர் நிற்பது போன்றும், நாய் ஒன்று அவர் காலடியில் இளைப்பாறிக் கொண்டிருப்பது போலவும் காட்டப்பட்டுள்ளது. மார்கரெட் சுதர்லேன்ட் என்ற ஓவியரின் கைவண்ணத்தில் உருவான இந்த ஓவியம் பகிரங்கமாக கண்காட்சியில் வைக்கப்பட்டது கனடிய மக்கள் பலருக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது.

அல்பெர்டாவைச் சேர்ந்த ஊரசவளை ஏவநறயசவ என்பவர் இதில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கூறி நீதிமன்றில் புகார் அளித்திருந்தார். இந்த வழக்கினை விசாரித்த மனித உரிமைகள் தீர்ப்பாயம் மனுதாரரின் புகாரினை விசாரிக்க சட்டத்தில் இடமில்லை எனக் கூறி வழக்கினை நேற்று தள்ளுபடி செய்தனர்.

ஒன்றோரியோவைச் சேர்ந்த மார்கரெட் சுதர்லேன்ட் என்ற ஓவியரின் கைவண் ணத்திலேயே இந்த ஓவியம் வரையப்பட்டதையும், ஹார்ப்பர் அரசின் மீதான அதிருப்தியை தெரிவிக்கவே இந்தனை வரைந்ததாகவும் , ஓவியத்தை $5,000 க்கு விற்று விட்டதையும் ஓவியர் ஒப்புக் கொண்டுள்ளார்.


புற்றீசல் போல் பரவுகிறது இகோலி நுண்கிருமி



கடந்த சில தினங்களுக்கு முன்னர் பெரும் பீதியைக் கிளப்பிய அல்பெர்டாவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் ஒடு Foods நிறுவன மாட்டிறைச்சித் தயாரிப்புகள் கனடிய உணவுப் பாதுகாப்பு அமைப்பினால் தடை செய்யப்பட்ட பின்னரும் கூட அமெரிக்காவிலும், கனடாவிலும் இந்நிறுவன மாட்டிறைச்சிகளை வாங்கி உட்கொண்டார் பாதிப்படைவது நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. நேற்றைய நிலவரப் படி கனடாவில் 10 பேர் இந்நிறுவனத் தயாரிப்புக்களை உட்கொண்டு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதான அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகியுள்ளன. இவர்களில் பெரும்பான்மை யானோர் அல்பெர்டா பகுதியைச் சேர்ந்தோரே. கியூபெக்கில் இருவரும், Newfoundland மற்றும் Labrador பகுதிகளில் தலா ஒருவரும் இதனால் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

கடந்த செப்ரம்பர் 13 ஆம் திகதியே இந்நிறுவனத் தயாரிப்புக்களை இறக்குமதி செய்வதை நிறுத்திக் கொள்வதாய் அமெரிக்க அறிவித்து விட்டது. இதைத் தொடர்ந்து கனடிய உணவு பாதுகாப்பு அதிகாரிகள் நடத்திய சோதனையில் இந்நிறுவனத்தின் 1,800 மாட்டிறைச்சித் தயாரிப்புகளில் இகோலி நுண் கிருமி பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதால் செப்ரம்பர் 27ஆம் திகதி முதல் இந்நிறுவனம் தயாரிப்பை நிறுத்தியும் விட்டது. இருப்பினும் மக்கள் பாதிப்படையும் வீதம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் தங்கள் வீடுகளில் இந்நிறுவனத் தயாரிப்புக்களை வாங்கி வைத்திருப்போர் யாரும் அதனைப் பயன்படுத்த வேண்டாமென அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

பிரபல கால்பந்து பயிற்சியாளர் ஜெர்ரி சாண்டுஸ்கிக்கு 30 ஆண்டு சிறை



பென்சில்வேனியா பல்கலைக்கழக கால்பந்து பயிற்சியாளராக பணியாற்றியவர் ஜெர்ரி சாண்டுஸ்கி. சிறார் காமுக வேலைகளில் ஈடுபட்ட தாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. 65 வயதா கும் சாண்டுஸ்கி கடந்த 15 ஆண்டுகளில் நாற்பது க்கும் மேற்பட்ட சிறுவர்களுடன் தகாத முறையில் உடலுறவு வைத்துக்கொண்டது தொடர்பான வழக்கில் நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

சாண்டுஸ்கி மீது தொடரப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் நிருபிக்கப்பட்டுள் ளதாலும், தன்னிடம் கால்பந்து கற்றுக் கொள்ள வந்த மாணவர்களை உடல் ரீதியாகவும் , மன ரீதியாகவும் பெரும் இன்னல்களுக்கு உட்படுத்தியதால் 30 முதல் 60 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதித்து நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். பென்சில்வேனியா சட்டங்களின் படி குறைந்த பட்ச தண்டனையான 30 ஆண்டுகளை சிறையில் சாண்டுஸ்கி கழித்தே தீர வேண்டும். அது வரையிலும் அவருக்கு பிணை வழங்கவும் முடியாது.

ஏற்கனவே 65 வயதுக்கும் மேல் ஆனவரான கால்பந்து பயிற்சியாளரான ஜெர்ரி சாண்டுஸ்கிக்கு இது ஆயுள் தண்டனையாக அமைந்து விட்டது. இருப்பினும் தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு செய்யப் போவதாக கூறியுள்ளார் சாண்டுஸ்கியின் சட்டத்தரணி.

கனடாவில் குடியேறிய போது உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள் !! தமிழ் சமுதாயத்தினருக்கு சி.பி.சி அழைப்பு



கனடா குடிபெயர்ந்தவர்களின் தேசம் எனக் கூறலாம். உலகம் முழுதிலும் உள்ள அனைத்து நாடுகளிலிருந்தும் பல கலாச்சாரங்களைக் கொண்ட மக்கள் தங்கள் குடும்பங்களுடன் புதிய வாழ்க்கைக்காக கனடா வந்து சேர்வது வாடிக்கையாக நடைபெறும் ஒன்று தான். கடந்த வருடத்தில் மட்டும் பல்வேறு நாடுகளில் இருந்து வந்த 250,000 பேர் கனடாவில் நிரந்தர குடி மக்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர் என்பதை அதிகாரபூர்வ புள்ளி விபரங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இந்த ஆண்டு கனடாவில் குடியேறுவதற்காக இதைப் போன்று இரு மடங்கு பேர் குடிவரவுத் துறையிடம் விண்ணப்பித்துள்ளனர்.

இது ஒருபுறமிருக்க கனடிய குடிவரவுத்துறையின் வழிமுறைகளை சரியாக விளங்கிக் கொள்ளாமல் வெளிநாடுகளிலிருந்து கனடா வர விண்ணப்பிக்கும் பலருக்கும குடிவரவுத் துறையின் செயல்பாடுகள் அச்சத்தையே வரவழைக்கின்றன. இது போன்ற விண்ணப்பங்கள் பல தேங்கிக் கிடப் பதால் குடிவரவுத்துறையிடம் அனுமதி கோரிய பலர் காலவரையின்றி காத்துக் கிடக்க வேண்டிய சூழல் ஏற்படுவதோடு பலர் மன உளைச்சல்களுக்கும் ஆளாகின்றனர். கனடிய குடிவரவுத் துறையின் வழிமுறைகளை சீரமைத்து அவற்றில் புதிய மாற்றங்களை கொண்டு வர வேண்டும் என நிபுணர் குழு அளித்த பரிந்துரைகளையும் கடந்த பெப்ரவரி மாதத்தில் அரசு வெளியிட்டது.

புதிய மாற்றங்கள் உருவாக்கப்பட்டாலும் அவை நடைமுறைக்கு வருவதற்கு நீண்ட காலம் ஆகும் என்பது அனைவரும் அறிந்ததே. கனடாவில் இருக்கும் நாம் அனைவருமே ஏதாவது ஒரு வகையில் குடிவரவுத்துறையினை ஒரு காலத்தில் தொடர்பு கொண்ட அனுபவம் உடையவர் களாகவே இருப்போம் என்பதில் எந்த ஐயமுமில்லை. நீங்கள் கனடாவிலேயே பிறந்து வளர்ந்தவர் களாக இருப்பினும் கூட உங்களைச் சுற்றியுள்ள நண்பர்கள் மற்றும் சுற்றத்தாரில் பலர் கனடிய குடிவரவு அனுபவங்களைக் கொண்டவர்களாகவே இருப்பர். நம்மில் சிலருக்கு குடும்பத்துடன் ஒன்று சேர்வதற்கும், வெளிநாடுகளிலிருந்து பணியாளர்களை கனடா அழைத்து வருவதற்குமான குடிவரவு அனுபவங்களும் இருக்கக் கூடும். பலர் நண்பர்கள் மற்றும் சுற்றத்தினருக்கு பார்வையாளர் விசா பெறுவதற்கு உதவியவர்களாகவே இருப்போம். நம்மில் பலர் நம் சொந்த நாட்டில் இருந்து கனடா வந்து படிக்க விரும்பும் மாணவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டியிருக்கக் கூடும்.

கனடிய குடிவரவு வழிமுறைகளை ஆராய்வதற்காக கனடாவில் குறிப்பிடத்தகுந்த இடம் பிடித்துள்ள தமிழ் சமுதாயத்தினரின் அனுபவங்களையும் , கதைகளையும் பகிர்ந்து கொள்ளுமாறு சிபிசி ஊடகம் அழைப்பு விடுத்துள்ளது. நம்மில் சிலருக்கு கனடிய குடிவரவு எளிதாக அமைந்திருக்கக் கூடும். அதே நேரத்தில் சிலர் இது வரையிலும் வாழ்க்கையில் சந்தித்திராத பல சவால்களை சந்தித்தே கனடாவிற்குள் வந்து சேர்ந்திருப்போம்.

தமிழ் மக்கள் தங்கள் குடிவரவு அனுபவங்களை community@cbc.ca என்ற மின்னஞ்ச லுக்கு அனுப்பி வைக்கலாம் அல்லது http://www.cbc.ca/news/yourcommunity/ 2012/10/share-your-immigration-stories-with-us.html என்ற இணைய முகவரியிலும் உங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளலாம். இவற்றில் சிறந்த அனுபவங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சிபிசி வானொலி மற்றும் தொலைக்காட்சியில் தொடராகவும் ஒளிபரப்பப்பட உள்ளது.

இளம்பெண்களை கடத்தி விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது தொடர்கிறது கனடாவில் பருவப் பெண்களுக்கு போலிஸ் எச்சரிக்கை

TORONTO POLICE

14 முதல் 18 வயதுள்ள பெண்களை கடத்தி விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் குற்றங்கள் கனடாவில் பெருகத் தொடங்கியுள்ளன. இந்த விவகாரம் தொடர்பில் ஏற்கனவே இருவரை கைது செய்த றொறன்ரோ காவல்துறை அதிகாரிகள் 14 வயதுப் பெண்ணொருவரை கடத்தி வந்து வலுக்கட்டாயமாக தெருவில் விபச்சாரப் பணிகளுக்கு பயன்படுத்திய மற்றுமொரு நபரை கைது செய்தனர். இந்த வாரத்தில் மட்டும் இது போன்ற குற்றங்கள் தொடர்பில் இது வரையிலும் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தலைமைக் காவல் அதிகாரி கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்கள் இருவரும் றொறொன்ரோவின் வட மேற்கு பகுதியில் வசித்து வந்தவர்கள் என்ற தகவல் மட்டுமே வெளியாகியுள்ளது. குற்றம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள மூவரையும் நீதிமன்றில் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது போன்ற சம்பவங்களை முற்றிலும் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் அதே நேரத்தில் பருவப் பெண்கள் கடத்தல் ஆசாமிகளிடமிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளுமாறும் காவல்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

முன் பின் தெரியாத ஆசாமிகள் உங்களை அனுகி ஏதாவது பேசினால் அதனை செவி மடுக்க வேண்டாம் என தமிழ்ப் பெண்களை இகுருவி வாயிலாக கேட்டுக் கொள்கின்றோம்.

லிபரல் கட்சியை தலைமைப் பொறுப்பேற்று வழிநடத்தத் தயார் Justin Trudeau பகிரங்க அறிவிப்பு



லிபரல் கட்சியின் தலைவருக்கான தேர்தலில் கனடிய மக்கள் அனைவராலும் நன்கறியப் பட்ட முன்னாள் பிரதமர் பியரி ட்ருடுவின் மகன் ஜஸ்டின் போட்டியிடுவாரா, மாட்டாரா என்ற குழப்பம் கடந்த வாரம் முழுவதும் நீடித்த நிலையில் தலைவர் தேர்தலில் தான் போட்டியிடப் போவதை உறுதிபட அறிவித்ததன் மூலம் இப்பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளார் ஜஸ்டின். அதே நேரத்தில் லிபரல் கட்சியினருக்கும் பல அறிவுரைகளை வாரி வழங்கியுள்ளார்.

2011ல் நடந்த தேர்தலில் படு தோல்வியைத் தழுவிய நாம், இனி கட்சியின் எதிர்காலத்தில் பெரும் அக்கறை செலுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். என்னைப் போன்ற பிரபலமானவர்கள் தலைவர்களாகி விட்டால் மட்டும் பிரச்சினை முடிவுக்கு வந்து விடாது. கடந்த காலங்களில் கற்றுக் கொண்ட பாடங்களை நினைவில் கொண்டு இனி கட்சியின் எதிர்கால வளர்ச்சி ஒன்றினை மட்டுமே மனதில் நிறுத்தி அதற்காக ஒன்றுபட்ட தலைமையின் கீழ் இயங்க லிபரல் கட்சியினர் முயன்றால் மட்டுமே எதிர்காலத்தில் கட்சியினைக் காப்பாற்ற முடியும் என்று அவர் நேற்று கூறினார்.

கனடாவில் அகதி அந்தஸ்து கோருபவர்கள் கௌரவமாக நடத்தப்படவேண்டும்! குடிவரவு நிபுணர்கள் குழுவின் அறிக்கை.




அகதி அந்தஸ்து கோரி கனடா செல்பவர்கள் தொடர்ந்தும் கௌரவமான முறையிலே நடத்தப்பட வேண்டும் என கனேடிய ஒன்றாரியோ மாநிலத்தின் குடிவரவு தொடர்பான நிபுணர்கள் குழு அறிக்கை மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

கனேடிய குடிவரவு துறையினர் அறிமுகப்படுத் தியுள்ள புதிய சட்டம், கனேடிய பொருளா தாரத்தை பெருமளவில் பாதிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. அறிமுகப்படுத்தப் பட்டுள்ள புதிய சட்டத்திற்கு அமைய, தொழில் அனுபவம் மற்றும் நிபுணத்துவ தரத்தினை கொண்டவர்கள் கனடாவில் குடியேறுவதில் கட்டுப் பாடுகள் விதிக்கப்படுவதனாலேயே இந்த நிலைமை ஏற்படும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

நிபுணர்களினால் மாகாணத்தின் குடிவரவு மற்றும் குடியுரிமைகள் துறை அமைச்சர் சார்ஸ் சுசாவிடம் சமர்ப்பிக்கப்பட்ட அந்த அறிக்கையில் மேலதிக விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதே வேளை, 1983 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தை அடுத்து அப்போதைய கனேடிய பாராளுமன்ற யாப்பில் இலங்கை தமிழர்களுக்கு விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று திருத்தம் ஒன்ற முன்வைத்திருந்தது.

இதனையடுத்து அந்தகால கட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான இலங்கை தமிழர்கள் இலங்கை தமிழர்கள் நிரந்தர குடியுரிமையை பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சொந்தங்களுடன் இணைந்து கொண்டாடவே கனடாவில் இசை வெளியீடு அமீர் உருக்கமான பேச்சு



தமிழ் திரையுலகில் கிராமத்துப் பின்னணியுடன் கூடிய பருத்திவீரன் உள்ளிட்ட மெஹா ஹிட் படங்களை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கும் அமீரின் இயக்கத்தில் ஜெயம் ரவி, நீது சந்திரா இணைந்து நடித்த ஆதி பகவன் திரைப்பட இசை வெளியீடு நேற்று POWERADE சென்ரரில் விமரிசையாக நடைபெற்றது. திமுக அரசியல் பிரமுகர் ஜெ. அன்பழகன், இயக்குனர் அமீர் , ஆதிபகவனுக்கு இசை அமைத்துக் கொடுத்த யுவன் ஷங்கர் ராஜா , கதாநாயகன் ஜெயம் ரவி, கதாநாயகி நீது சந்திரா உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக கனடா வந்திருந்தார்கள்.

நிகழ்ச்சியில் தொடக்க உரையாற்றிய திரைப்பட இயக்குனர் தமிழர்களின் பாரம்பரிய உடையில் அவர்களை சந்திக்க முடியாமல் போனது சிறு சங்கடத்தை ஏற்படுத்தியதாகக் கூறினார். நடிகர் கமலஹாசன், நாம் தமிழர் சீமான் ,திரைப்பட இயக்குனர் மணிவண்ணன் ஆகியோர் இசை வெளியீட்டு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்கள்.

சமீப காலமாகவே தமிழ் திரைப்படங்களுக்கு துபாய், மலேசியா உள்ளிட்ட நாடுகளில் பிரமாண்டமாக விழாக்கள் நடத்தப்படுவது வழமையாகி வருகிறது என்ற போதிலும் கூட, இது வரையிலும் கனடாவில் எந்த திரைப்படத்திற்கும் இசை வெளியீட்டு விழா நடத்தப்படவில்லை. விடுபட்ட சொந்தங்களுடன் இணைந்து விழா நடத்தவே கனடாவில் இசை வெளியீட்டிற்கு ஏற்பாடு செய்ததாகக் கூறினார் அமீர்.

அமீர் – யுவன் ஷங்கர் ராஜா கூட்டணியில் உருவான அனைத்து பாடல்களுமே தமிழ் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்று வருவதால் இந்த படத்திலும் பாடல்கள் பெரும் வெற்றியைத் தேடித் தரும் என நம்பப்படுகிறது. இருப்பினும் ஆதிபகவன் இசை வெளியீட்டு விழாவிற்கு எதிர்பார்த்த அளவிற்கு மக்கள் கூட்டம் வராதது சற்று மனவருதமாகவே இருந்தது.

பாலச்சந்திரன் என்ற கலை ஆளுமை அற்புதமான நூல் வெளியீடு



வானொலி,தொலைக்காட்சி,மேடை,திரைபடக்கலைஞர், நேர்முக வர்ணனையாளர், திரைப் பட இயக்குனர்,தொலைக்காட்சி நிகழ்ச்சித்தயாரிப்பாளர் எழுத்தாளர் எனப் பன்முகப் பக்கங்களைக் கொண்ட திரு கே எஸ் பாலச்சந்திரன் அவர்களுக்கு நேற்று அவரின் வரலாற்று நூல் வெளியீடு செய்யப்பட்டது.

பாலச்சந்திரன் என்ற கலை ஆளுமை என்று பெயரிடப்பட்ட அந்த அற்புதமான நூல் வெளியீட்டோடு அவருக்கான பாராட்டு விழாவும் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள். ஸ்காபு ரோ பகுதியில் இந்த பாராட்டு விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு நிகழ்விற்கு எழுத்தாளர் திரு குரு அரவிந்தன் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கியிருக்கிறார்.அங்கு கலைஞர், எழுத்தாளர் திரு கே எஸ் பாலச்சந்திரன் அவர்கட்கு உயரிய விருதாக தலைக்கோல் விருது. வழங்கி கௌரவிக்கப் பட்டிருக்கிறது.

அங்கு இடம்பெற்ற நிகழ்வுகள் கூட தமிழர்களின் தனித்துவக்கலைகளுக்கு கிடைத்த கௌரவங்கள் தான்.சோக்கல்லோ சண்முகம் அவர்கள் குழுவினரின் வில்லடிப்பாட்டு நிகழ்ச்சிக்கான தனித்துவம். அதுமட்டுமல்லாமல் பாலாவின் நனைவோடை என்ற விவரணச் சித்திரமும் காண்பிக்கப் பட்டிருக்கிறது. உண்மையில் கலைஞர்கள் வாழுங்காலத்தில் வாழ்த்தும் நடைமுறைகள் சிறப்பு. பாலச்சந்திரன் என்ற கலை ஆளுமை எமக்கு கிடைத்த பொக்கிஷம். தான் மட்டுமல்ல தனது கலை ஈடுபாட்டினை பல இளைஞர்களுக்கு விதைத்திருக்கிறார் கே எஸ் பாலச்சந்திரன் அவர்கள். கனடாவின் பல வளரும் கலைஞர்களோடு இணைந்து பல கலைப்படைப்புகளை தந்திருக்கிறார். தான் பெற்ற அனுபவத்தை மற்றவர்களோடும் பகிர்ந்து அதன் மூலம் இளைஞர்களையும் அதில் ஈடுபடுத்தி தனது கலைப்பணியை செவ்வனே ஆற்றியிருக்கிறார்.

உண்மையில் அவருக்கான இந்த விழா எடுத்தவர்களும் நன்றிக்குரியவர்கள்.கலைஞர்கள் வாமுங் காலத்திலே வாழ்த்தும் விடயம் பாராட்டுக்குரியதும் கூட.எமது தனித்துவங்களை உண்மையான உணர்வோடு உலகிற்கு கொண்டு செல்லவேண்டிய பொறுப்பை உணர்ந்து எமது ஈழ கலை அடையாளமாகிய கே எஸ் பாலச்சந்திரன் அவர்கட்கு விழா எடுத்தமை படைப்புக்களம் சார்பில் அனைவருக்கும் நன்றிக்குரியவர்களே. பாலச்சந்திரன் என்ற கலை ஆளுமையை எம்மவர்காலத்தில் பெற்ற பெருமை எமக்கும் உரியதே.என்றும் பல விருதுகளை தனதாக்கி இன்னும் பல படைப்புகளூடாக சந்திக்கவேண்டும்

K.S. பாலச்சந்திரனுக்கு தலைக்கோல் விருதும் அவர் பற்றிய சிறந்த வில்லுப்பாட்டு நிகழ்வும் காணொளித் தொகுப்பும் புகைப்படத்தொகுப்பும் www.biztha.com

Biztha Web Awards 2012

"சிறந்த இணையதளத்திற்கான தேடல்"



கனடிய தமிழ் தொழில் முனைவோர் மற்றும் சேவை அளிப்போரின் சிறந்த இணைய தளங்களை உலகிற்கு அறிமுகம் செய்யும் பொருட்டு இந்த ஆண்டு முதல் "Biztha Web Awards" எனப்படும் சிறந்த இணைய தளத்திற்கான விருதினை Business Connections அறிமுகம் செய்கிறது.

இணையதளங்களின் மூலமாக உங்கள் தொழிலுக்கு பல புதிய வாய்ப்புக்களை உண்டாக்குவதுடன், கனடிய தொழில் இணைய தளங்களுக்கு சர்வதேச அங்கீகாரம் ஏற்படுத்திக் கொடுக்கவே இந்த இணைய தளப்போட்டி நடத்தப்படுகிறது.

விருது வகைகள்


1) சிறந்த கூட்டமைப்பு நிறுவன இணையத்தளம்.
   (Best Corporate Website)
2) சிறந்த தொழில் சேவை இணையத்தளம்.
   (Best Business Service Website)
3) சிறந்த தன்னார்வத் தொண்டு இணையத்தளம்
   (Best Non-Profit Website)
4) சிறந்த ஊடக அல்லது தகவல் இணையத்தளம்
   (Best Media or Informatic Website)

உங்கள் இணையதளத்தின் பெயர் குறிப்பிடப்படுவ துடன் இணையதளம் தொடர்பான வாக்குகளும் சேகரிக்கப்பட்டே முடிவெடுக்கப்படும். எனவே விரைந்து மனு செய்யுங்கள்

Nominate Your Website.
விண்ணப்பிக்க கடைசி நாள்
Novermber 1, 2012

Business Connections
www.biztha.com
416 272 8543

புதிதாய் வருகிறது கோபப் பறவைகள்



உலகெங்கும் மிகப் பிரபலமாக இருக்கும் ஆங்கிரி பேர்ட்ஸ் எனப் படும் கோபப் பறவைகள் விளையாட்டில் புது வடிவம் அடுத்த மாதம் வர இருக்கிறது. ஸ்டார் வார்ஸ் திரைப்படத்தின் கதாபாத்திரங்கள் ஆங்கிரி பேர்ட்ஸ்/டன் இணைந்து ஸ்டார்வார்ஸ் பதிப்பு வர இருக்கிறது.

இதற்காக ஸ்டார்வார்ஸ் உரிமையை வைத்திருக்கும் லுகாஸ் ஃபிலிம்ஸ்/ம் ஆங்கிரி பேர்ட்ஸ் உரிமையாளர்கள் ரோவியோ எண்டர்டெயின்மெட் நிறுவனமும் ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். மூன்று பிரிவுகளில் பத்து பொம்மைகளை நவம்பர் மாதம் வெளியிட முடிவு செய்திருக்கிறார்கள்.

ஸ்டார் வார்ஸ் கதாபாத்திரங்கள் பன்றிகளாகவும் கோபக்கார பறவைகளாகவும் உருமாற இருக்கின்றன. இதன் இரண்டாம் பாகம் 2013ஆம் வருடம் வெளியிடப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுவை மாறும் சோளப் பொறி

இனி சோளப் பொறிதானே என்று அலட்சியமாய் சொல்ல இயலாது, திரையரங்குகளிலும் பூங்காக்களிலும் காடைத்தெருக்களிலும் பிரபலமாய் விற்கபடும் பாப் கார்ன் எனப்படும் சோளப் பொறி நிறம் சுவை எல்லாம் மாறி வருகிறது. தன்னுடைய வித்தியாச சோளப் பொறியை உருவாக்க பெக்கி ஸ்மோலெட்டுக்கு ஒன்றரை வருடங்கள் பிடித்தன என்று சொன்னால் நம்ப இயலுகிறதா?

சோளப் பொறியை செய்ய அவர் விவசாயப் பண்ணைக்கே போய்விட்டார். அங்கு ரசாயண உரம் கலக்காத மரபணு மாற்றப் படாத சோளத்தை விதைத்து அது வளர்வதைக் கண்காணித்து அதை நல்ல முறையில் அறுவடை செய்து அதன் பிறகுதான் கொள்முதல் செய்கிறார், அதன் பின் தான் தன்னுடைய விசேஷ மசாலாக்களை போட்டு சோளப் பொறியைத் தயாரிக்கிறார்.

இவரது, "ஃபார்ம் டு டேபிள் கனடா பாப் கார்ன்" நான்கு விதமான சுவைகளில் கிடைக்கிறது. பொறித்தது 250 கிராம் 2.99 டாலர்கள். பொறிக்காதது 65 கிராம் 2.49 டாலர்கள். இது போன்று பலர் வித விதமான சோளப் பொறிகளைத் தயாரித்து சந்தையில் வெளியிட்டிருக்கிறார்கள். சமைக்கும் விதத்தைப் பொறுத்து சோளம் உடல் நலத்துக்கு நல்ல உணவு, குறைந்த கொழுப்பும் நிறைந்த நார் சத்தும் உடலுக்கு நல்லது. கலோரிகள் அதிகரிக்காமல் உண்ண விரும்புவர்களுக்கு சோளப் பொறி சிறந்த உணவு.

ஸ்மொலேட்டைப் போல இன்னும் மூன்று பெண்கள் வித்தியாசமான சோளப் பொறி தயாரிப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள். வித்தியாசமான உணவு வகைகளுக்காக நடந்த வருடாந்திர மாநாட்டில் இவர்கள் நால்வரும் கலந்துக் கொண்டனர். இந்த மாநாடு மெட்ரோ றொரன்றொ கன்வென்ஷன் மையத்தில் நடைப் பெற்றது.

கார்களில்லா சாலைகள் நிஜமாகுமா?

நம் சிறு வயதில் சாலைகளி மகிழ்ச்சியாக விளையாடியிருப்போம். ஆனால் இப்போதுள்ள போக்குவரத்தில் அதற்கு சாத்தியமில்லை. 2011 ஆம் ஆண்டு மெக்சிகோ நகரான குடாலாஜாராவுக்கு சென்றிருந்தார் நகரசபை உறுப்பினர் கெர்ஸ்டின் வாங் டாம். அங்கே ஒரு ஞாயிறு காலை அறுபது கிலோ மீட்டர் சாலைகளில் வாகனங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஞாயிறும் அப்படிதானாம்.

"என்னுடைய நகர வாழ்க்கையில் அப்படியொரு காட்சியை நான் பார்த்ததில்லை. சாலைகள் எல்லாம் எந்தப் போக்குவரத்தும் இல்லாமல் அமைதியாய் அற்புதமாய் இருந்தன" என்கிறார் வாங் டாம். உடனே ஒரு சைக்கிளை எடுத்துக் கொண்டு நகரத்தைச் சுற்றிப் பார்க்க கிளம்பிவிட்டாராம், வாகனங்கள் அற்ற சாலையில் பயணித்த அந்த அனுபவம் மிகப் பிரமாதமாக இருந்தது என்று கூறுகிறார் அவர்.

அந்த அனுபவத்தை இப்போது றொறொண்றொ நகரிலும் செயல்படுத்த முயற்சிக்கிறார்.வரப் போகும் நகர சபை கூட்டத் தொடரில் வாகனங்கள் இல்லா சாலைகள் குறித்து ஒரு மசோதாவை தாக்கல் செய்யப் போகிறாராம். ஏற்கனவே ஜார்வீஸ் சைக்கிள் பாதையை மூடிய எரிச்சலில் இருக்கும் நகர மக்கள் இது போன்ற மசோதவை நிச்சயம் வரவேற்கும் சூழல் உள்ளது.

இது போன்று நகர சாலைகளை மூடுவது றொரண்றொ நகர மக்களுக்குப் புதில்லை. மாரத்தான் போட்டிகள், இசை நிகழ்ச்சிகளுக்காக சாலைகள் மூடப்படுவது உண்டு..ஆனால் இது போன்ற நீண்ட தூரங்களுக்கு சாலைகளை மூடும் வழக்கம் இல்லை. இது போன்று முக்கிய சாலைகளை மூடும் போது போக்குவரத்து நெரிசல் ஏற்படாதவாறு கவனித்துக் கொள்ள வேண்டும். இதற்கு போக்குவரத்து துறையும் நகரசபையும் ஒருங்கிணைந்து செயல்படுதல் வேண்டும்

காணாமல் போன பிச்சைக்காரர்கள்

றொரண்றொ நகரில் ஒரு விஷயத்தை நீங்கள் கவனித்திருப்பீர்கள். சாலையோரங்களில் அமர்ந்து பிச்சைக் கேட்கும் மனிதர்களின் தொல்லை வெகுவாக குறைந்திருக்கும். எங்கே போனார்கள்? எப்படி போனார்கள்?

அவர்கள் ஓய்வு விடுதிக்குச் சென்று ஓய்வு எடுக்கச் செல்லவில்லை. காவல் துறையினரால் நகரத்தை விட்டு வெளியே துரத்தப்பட்டிருக்கிறார்கள், "பாதுகாப்பான வீதிகள் சட்டப்படியும் கடுமையான காவல்துறை கண்காணிப்பினாலும் அவர்கள் நகர வீதிகளிலிருந்து துரத்தப்பட்டு விட்டார்கள். நகர எல்லைகளில் உள்ள பகுதிகளில் அவர்கள் இருக்கிறார்கள்" என்று சொல்லுகிறார் யார்க் பல்கலைக் கழகத்தின் இணைப் பேராசிரியர் ஸ்டீபன் கெட்ஸ்.

"இவர்கள் நகர வீதிகளில் அலைவதும் பிச்சைக் கேட்பதும் சாலைகளிலும் வீட்டு வாசல்க ளில் படுத்து உறங்குவதும் மக்களுக்குப் பிடிக்கவில்லை. மனதளவில் பாதிக்கிறது என்கிறார்கள். அதனால் இப்போது பிச்சைக்காரர்களுக்கு எதிராக தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது" என்கிறார். கடந்த பதினோரு வருடங்களில் வீடில்லாதவர்களுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் எதிராக காவல்துறை எடுக்கும் நடவடிக்கை 2000சதவீதம் உயர்ந்திருக்கிறதாம்.

ஜேம்ஸ் பாண்டின் "ஸ்கை ஃபால்" இசை வெளிவந்தது

ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கபடும் அடுத்த ஜேம்ஸ் பாண்ட் திரைப்படமான ஸ்கைஃபால் அடையாள இசை வெளியிடப்பட்டிருக்கிறது. எட்டு கிராமி விருதுகள் வென்ற அடெல் இந்தப் பாடலை இசைத்திருக்கிறார். பரபரப்பாக விற்பனையான அவரது "21" இசைத் தொகுப்புக்குப் பிறகு அவர் வெளியிடும் பாடல் இது என்பது குறிப்பிடத்தக்கது. ஜேம்ஸ் பாண்ட் கதாபாத்திரம் உதித்து ஐம்பதாவது ஆண்டைக் கொண்டாடும் சூழலில் இந்தப் பாடல் வெளியிடப்படுகிறது.

இந்தப் பாடலில் ஒலிப்பதிவு லண்டன் நகரிலுள்ள அபே ரோடு ஒலிப்பதிவுக் கூடத்தில் நடந்தது. அடெல்லுடன் பால் ஈப்வொர்த்தும் இணைந்து இசைத்திருக்கிறார். ஜேம்ஸ் பட வரிசையில் ஸ்கை ஃபால் 23வது படம். இதில் ஜேம்ஸ் பாண்டாக டேனியல் கெரெக் நடித்திருக்கிறார். இத் திரைப்படம் நவம்பர் 9ஆம் தேதி கனடாவில் திரையிடப்படுகிறது

கணனி மோசடியை தவிர்க்க புதிய தொழில்நுட்பம் அறிமுகம்

கணனி பாவனையாளர்கள் அனைவரும் தனக்கென தனி இரகசிய குறியீடுகளை வைத்திருப்பர். ஆனால் இதனை அறிந்து கொண்டு ஒருவரின் தகவல்களை அறியவும், மோசடி செய்யவும் அதிகளவு வாய்ப்பு உண்டு.

இதனை தடுப்பதற்காக தற்போது புதிய நவீன தொழில்நுட்பம் அறிமுகமாக உள்ளது. அதாவது கணனியில் குறித்த பாவனையாளர்களின் கண் கருவிழி படலங்களின் பார்வை இரகசிய குறியீடாக பயன்படுத்தப்பட உள்ளது.

இந்த புதிய முறையை அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள சான்மார்கோ பல்கலைகழகத்தை சேர்ந்த கணனி விஞ்ஞானி ஒலெக் கொமோ, கோர்ட்சேவ் கண்டுபிடித்துள்ளனர். இவர்கள் கூறுகையில், ஒரு பொருளை இரண்டு பேர் ஒரே மாதிரியாக பார்க்க முடியாது. ஒவ்வொருவரின் பார்வையும் பல கோணங்களாக தான் இருக்கும். எனவே ஒருவரின் தகவல்களை திருடுவது என்பது முடியாத ஒன்று என்று தெரிவித்துள்ளனர். இத்தொழில்நுட்பம் விரைவில் அமுலுக்கு வரவுள்ளது.

Vimal Nishanth

இன்று அகிலாண்ட கோடி, பிரமாண்ட நாயகியின் மகிமையை பூவுலகத்துக்கு உணர்த்தும் மஹா நவராத்திரி விரதாரம்பம்...........
நவராத்திரியின் முதல் மூன்று பிரதமை, துதியை, திருதியை தினங்களில் வீரம் மற்றும் தைரியம் வேண்டி கிரியா சக்தியான துர்க்காதேவியை பிரார்த்தித்தும்,
அடுத்து வரும் சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி வரையான மூன்று தினங்களும் சகல செல்வங்கள் கிடைத்திட வேண்டி இச்சா சக்தியான இலட்சுமி தேவியை பிரார்த்தித்தும் , இறுதி சப்தமி, அட்டமி, நவமி வரையான மூன்று தினங்களும் நிறைந்த கல்வி அறிவு மற்றும் சகல கலை ஞானங்கள் கிடைத்திட வேண்டி ஞான சக்தியான சரஸ்வதி தேவியை பிரார்த்தித்தும் பத்தாம் நாளான விஜய தசமியில் பாலகருக்கு ஏடு தொடக்கி வைத்து பூஜிக்கும் வழிபாடே இந்த நவராத்திரி எனும் அற்புத வழிபாடு!!!!!!!!!!!

Shanthi Babu

அரசியல், சினிமா, விளையாட்டு, தொழில்நுட்பம், பொழுதுபோக்கு, அரட்டை, இன்பம், துன்பம் என எல்லாவற்றிக்கும் பதில் வைத்திருக்கிறது முகநூல்....
ஒன்றை தவிர.... அது என்னன்னா ?????
எனக்குப் பசிக்குதுங்க சாப்பிட்டு வந்து சொல்கிறேன்

Karuna Vincent

அவர் ஒரு சிறந்த புகைப்பட கலைஞரும் கூட....



Muhunthan Rajadurai

சிலபேர் எதுவும் இல்லாம எழுதுற ஸ்டேடசுக்கு எல்லாம் நிறைய லைக் வருது. ஆனால் நாங்கள் முக்கி முக்கி எழுதினாலும் ஒரு லைக்கும் வருதில்லையே. அது எதனால?.

Ragu

கணினிகளை சிறப்பாக மலிவு விலையில் அளித்து Fortune Computer நிறுவனம் சாதனை இரவோடு இரவாக காத்திருந்து மின்னனு சாதனங்களை வாங்கிச் சென்றனர் ரொறொன்ரோ மக்கள்



Ram Prashan

Something Touched my mind...
நாம் நேசிக்கும் போது மட்டும் நேசிப்பவர்கள் "JUST FRIENDS"
நாம் வெறுத்த போதும் நம்மை நேசிப்பவர்கள் "BEST FRIENDS"

Tamil Cultural Nite 2012

Waterloo region's largest Tamil performing arts festival. Artists from South India, Toronto & local artists and University of waterloo students. Dance, Music, Tamil language student drama and much more. Indian & Sri lankan food. Humanities Theater, Univeristy of waterloo. FREE ADMISSION.
Saturday , OCtober 20, 2012 5.30 PM to 10.00 PM

e-குருவியும் Facebook

Piragal Thiru

My Premier! Granted nothing is perfect, thank you for bringing our schools to rank best in the English speaking world, reducing drop out rates, increasing enrollment in post secondary education, reducing wait times for health care, increasing access to family doctors, and establishing green belt around GTA. Your vision and accomplishment is nothing short of amazing!

Purujoththaman Thangamayl

“போராட்டமும்– புரட்சியும்“ இப்போதெல்லாம் அதிகம் தோற்கடிக்கப்படுவது “பேஸ்புக்“கில் தான்! என்ன போராட்டம், ஏன் புரட்சி? என்று தெரியாமலேயே தங்களை போராளிகளாகவும், புரட்சியாளர்களாகவும் காட்டிக்கொள்ள ஒரு கூட்டம் எப்போதுமே தயாராக இருக்கிறது இங்கு(குடீ). இந்த போலியானவர்கள் போதுமாக இருக்கிறார்கள் உண்மையான போராட்டத்தையும்– புரட்சியையும் தோற்கடிக்க!!
–இந்த பொழுதுபோக்கு (போலியான) போராளிகளையும்(?), புரட்சியாளர்களையும்(?) காணுகிற போது தொற்றிக்கொள்கிற காய்ச்சல் டெங்கு காய்ச்சலைவிட கொடியதாக வாட்டுகிறது. என்ன செய்ய பொழுதுபோக்கு போராளியாக மாறுவது தொடர்பான தகுதி எனக்கு இன்னும் இல்லையாம். ஆக! இறுதிவரை இப்படியே அரற்றிக்கொண்டிருக்க வேண்டியதுதான் போலும்.!!

Nathan Sk

எமது தாய் மண்ணுக்காகவும் எமது மக்களுக்காகவும்தன்னுயிரை ஈன்ற மாவீரச் செல்வங்களை பூசித்து வணங்கும் நாள்தான் கார்த்திகை மாதம் 12 கோடி தமிழ் மக்களின் உள்ளத்தில் அணையாத தீபமாய் இருப்பவர்கள் எம் மாவீரச் செல்வங்கள் இதே போல் உணர்வுதான் எமது மதிப்புக்குரிய இளையராஜா ஐயா உள்ளத்திலும் உள்ளது இதை உணர்ந்து கனடாவில் நடக்கும் இந்த நிகழ்வை காத்திகை மாதத்தில் நடத்த வேண்டாம் என்பதையும் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருப்பவர்கள் கவனத்தில் கொள்ளவும் இதே போல் ஏனைய நாடுகளிலும் கார்த்திகை மாதத்தில் இதைப்போல் நிகழ்வுகளையும் நடத்த வேண்டாம் என உரிமையோடு கேட்டுக் கொள்கிறோம் சத்திய இலட்சிய தீயில் தம்மையே அழித்து சரித்திரம் ஆகிவிட்ட எமது மாவீரர் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோம் என உறுதி எடுத்துக்கொள்வோம்

Raoul Sivanathan

உன்னை ஒரு கூட்டம் எப்படியாவது கீழே விழவைக்க திட்டமிடுகிறதா?
அப்படியென்றால் சந்தோசப்படு. நீ அவர்களை விட மேலே இருக்கிறாய்.

Toronto's Tamil Literary Voices

An exploration of the work of Tamil Canadian Writers shaped by the war and repression that brought the Tamil people to Canada. With short-story writer Appadurai Muttulingam, poet-playwright R. Cheran, actor-director Dushy Gnanapragasam and Professor Chelva Kanaganayakam.
Saturday , October 20, 2012 1.00 PM - 4.00 PM

ஹாட்லி கல்லூரி

24th Annual General Meeting and Hartley Nite of HCPPA Canada/USA will be held on Saturday November 3, 2012 at 6:00 PM. All members are invited to be present. Any resolution by members to be discussed under item No. 5 of the agenda shall be sent to the Secretary in writing by mail or email not later than October 19, 2012.

மதன்

மஹிந்த அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு “விடுதலைப் புலிகள்“ பாரிய சதி: கௌரவ மைத்திரிபால! தங்களின் வசதிக்கு ஏற்ப “புலிகள்“ இல்லை என்பதும் இருக்கு என்பதும் அரசாங்கத்தின் கேவலம் கெட்ட பிழைப்பா போச்சு!!

Chandrakanthan Chandranehru

தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் இருப்பது முரண்பாடுகள் அல்ல,
எம் தமிழ் மக்களின் மீதான அதீத பற்றே ! இதனை திரிபு படுத்த வேண்டாம்.

Ramanan Santhirasegaramoorthy

நொவம்பர் 3ம் திகதி கனடாவில் இசைஞானியின் இசை நிகழ்ச்சி ஒன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது. நெரவெம்பர் மாதம் தமிழர்களின் புனித மாதம் என்றும் மாவீரர்களின் நினைவு வாரம் அனுஸ்டிக்கப்படும் மாதம் என்றும் நாம் தமிழர் அமைப்பு சர்சைகளை ஏற்படுத்தியுள்ளது.
மாவீர்கள் எமது வாழ்வுரிமைக்காக தமது இன்னுயிர்களையே தியாகம் செய்த புனிதர்கள். அவர்கள் நொவெம்பரில் மட்டுமல்ல எங்கள் வாழ்வின் ஒவ்வொரு மணித்துளியிலும் நினைவு கொள்ளப்பட வேண்டியவர்கள். அவர்களின் ஈடு இணையற்ற தியாகத்தை தமது சுயலாப அரசியலுக்காக விலை பேசும் சிலரின் மறதிகளையும் மறைப்புகளையும் நினைவு படுத்த வேண்டியுள்ளது.
நாம் தமிழர் சீமான் முக்கிய பாத்திரத்தில் நடித்த " மகிழ்ச்சி" என்ற திரைப்படம் 2010ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 19ம் திகதி உலகம் முழுவதும் வெளியிடப்பட்டது. அப்போது சீமான் அவர்களுக்கு அது மாவீரர்களின் நினைவு மாதம் என்ற விடயம் மறந்து போய்விட்டது.

Uma Rajendram

Super singer Srinivas show this weekend Saturday October 20/2012 in Markham . I will also be singing with him in this show. I am singing after a long time so come cheer us up.

வகுப்புத் தோழர்களின் மாறாத வழக்கம் ஒரு கனடிய ஆச்சர்யம்



இந்தத் தகவல் கொஞ்சம் ஆச்சர்ய மாகதான் இருக்கிறது.தொடர்ந்து 65 வருடங்களாக ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வகுப்புத் தோழர்கள் சந்தித்துக் கொள்கிறார்கள். 1947ஆம் வருடம் ஸார்பரோ காலேஜியேட் இன்ஸ்டியுஷனில் (தற்போது ஆர்,எச்.கிங் அகாடமி) படித்த இருபத்தோரு மாணவர், மாணவிகள் ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட தினத்தில் சந்தித்துக் கொள்கிறார்கள். இது கடந்த அறுபத்தந்து வருடங்களாக தொடர்கிறது.


1947ல் இவர்கள் படித்து முடிக்கும் போது இவர்கள் ஆசிரியை கன்னஹன் தான் இந்த யோசனையைத் தந்தாராம். "படிப்பு முடிந்தாலும் நீங்கள் ஒருவருக்கொருவர் தொடர்பில் இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும். வருடத்தில் ஒருநாள் சந்தித்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்" என்று அந்த ஆசிரியை மாணவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். அதை இன்று வரை செயல்படுத்தி வருகிறார்கள் இந்த மாணவர்கள்.

இந்த புதன் அன்று அவர்கள் சந்திப்பு நடந்தது, உற்சாகமாய் பேசினார்கள். சிரித்தார்கள். மகிழ்ச்சியாய் உணவருந்தினர். அவர்கள் சந்திப்பு கொண்டாட்டமாய் இருந்தது. இவர்களில் பலர் எண்பது வயதைத் தாண்டிவிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆரம்ப இருபத்தோரு பேரில் சிலர் காலமாகிவிட்டார்கள். இருந்தும் இவர்கள் சந்திப்பு தொடர்கிறது.

மகிழ்ச்சியாய் பேசிக் கொண்டாலும் மரணத்தைப் பற்றி பேசவும் இவர்கள் தயங்குவதில்லை. சென்ற வருடம் அவர்கள் தோழி ஜேனட் மரணமடைந்ததைப் பற்றி பேசுகிறார்கள். அதை கேள்விப்பட்டவுடன் ஒரு பெண், "அதுதான் வாழ்க்கை. மரணம் ஒருநாள் கண்டிப்பாய் வரும். அதற்குள் வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்துவிட வேண்டும்" என மிக யதார்த்தமாய் கூறுகிறார்.

மரணத்தை பற்றி பேசும் வயதுக்கு அவர்கள் வந்துவிட்டாலும் பதின் பருவத்துக்குரிய மனநிலையும் அவர்களிடம் இருக்கிறது. அவர்கள் படிக்கும் காலத்தில் அணிந்த சீருடை பற்றி பேச்சு வந்த போது, " நம்மில் யாருடைய சீருடை பாவாடையின் அளவு மிகச் சின்னது? என்று ஒரு பெண்மணி கேட்க அங்கே சிரிப்பொலி எழுந்தது. அது வயதான பெண்களின் சிரிப்பொலிபோல் அல்லாமல் சிறு பெண்களின்போல் சிரிப்பொலி போல் இருந்தது.

கனடியர்களுக்கு கடன் குறைந்தது கருத்துக்கணிப்பில் கண்டுபிடிப்பு



சென்ற வருடத்தை விட கனடியர்களுக்கு கடன் குறைந்துள்ளதாக ஒரு கருத்துக் கணிப்பின் மூலம் தெரிய வந்துள்ளது. ஆர்சிபி நடத்திய இந்த கணக்கெடுப்பில் 26 சதவீத கனடியர்களுக்கு தனிப்பட்ட கடன் இல்லை என்று தெரிய வந்துள்ளது. இது சென்ற வருடத்தைவிட நான்கு சதவீதம் அதிகம். கடந்த வருடம் 22 சதவீதத்தினர் தான் தங்களுக்கு தனிப்பட்ட கடன் இல்லை என்று தெரிவித்திருந்தார்கள்.

ஆனால் சரசரியாக கனடியர்கள் 13,141 டொலர்கள் தனிப்பட்ட கடன் வைத்திருக்கிறார்கள் என்று தெரியவந்துள்ளது. இது சென்ற வருடத்தைவிட 84 டொலர்கள் அதிகம். இதில் அடமானக் கடன் சேர்க்கப்படவில்லை. இதில் ஒண்டோரியோ மக்கள்தான் அதிக கடனை சுமக்கிறார்கள். அவர்களுக்கு சராசரியாக 15,361 டொலர்கள் கடன் உள்ளது. க்யுபெக் மக்களுக்குதான் குறைந்த அளவு கடன் உள்ளது. இவர்களுக்கு சராசரியாக 10,171 டொலர் கடன் உள்ளது.

கருத்துக் கணிப்பில் கலந்துக் கொண்டவர்களில் மூவரில் ஒருவர் கடன் குறித்து மனக் கவலை இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார். இப்படி கவலைப்படுபவர்களின் எண்ணிக்கை சென்ற வருடத்தைவிட லேசாக அதிகரித்திருக்கிறது. ஐம்பத்தொரு சதவீதத்தினர் பணத்தை சேமித்து எதிர்காலத்துக்காக முதலீடு செய்வதை விட கடனை அடைப்பதுதான் முக்கியம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

விற்பனை வரியில் ஒரு சதவீதம் சாரா தாம்சனின் புது திட்டம்

சாரா தாம்சன், சென்ற மேயர் தேர்தலில் றோப் ஃபோர்டுடன் போட்டியிட்டு விலகியவர். றோப்பை போலவே சப்வே ரயிலின் ஆதரவாளர். நகரப் போக்குவரத்தை சீர்படுத்த என்ன செய்யலாம் என்று நகரசபை உறுப்பினர்கள் விவாதித்துக் கொண்டிருக்கும் சூழலில் விற்பனை வரியில் ஒரு சதவீதத்தை எடுத்து புதிய சப்வேக்களை கட்ட பயன்படுத்தலாம் என்று ஆலோசனை குறியிருக்கிறார்.

இந்த விற்பனை வரி மக்களுக்கு கூடுதல் சுமையாக இருக்காது என்று கருதுகிறார் சாரா தாம்சன். மக்களுக்கு அத்தியாவசியமாக தேவைப்படும் கிழக்கு மேற்கு சப்வேக்கு இந்தப் பணம் பயனுள்ளதாக இருக்கும் என்று அவர் கருதுகிறார். இந்தத் திட்டத்தை அவர் ஒரு சதவீத தீர்வு என்று அழைக்கிறார். விமன்ஸ் போஸ்ட் பத்திரிகை இவர் வெளியிடுவதுதான். இந்த ஒரு சதவீத தீர்வு திட்டத்துக்காக பிரச்சாரத் துக்கும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

டோயோட்டா கார்களில் கோளாறு



ஒன்றல்ல இரண்டல்ல. உலகம் முழுவதும் 7.4 மில்லியன் கார்களில் தானியங்கி ஜன்னல் கண்ணாடி சுவிட்சில் (Power Window Switch) கோளாறு என்று டோயோட்டா நிறுவனம் அறிவித்துள்ளது. கனடாவில் மட்டும் 240000 டோயோட்டா வாகனங்கள் இருக்கின்றன.

2005லிருந்து 2010 வரை தயாரிக்கப்பட்ட டோயோட்ட கொரலா, காம்ரி மற்றும் பன்னி ரெண்டு வகை கார்களில் இந்தக் கோளாறு இருப்பதால் அந்தக் கார்களை ஆங்காங்கே இருக்கும் டோயோட்டா சேவை மையத்துக்கு கொண்டு செல்லுமாறு டோயோட்டா நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது. அங்கே இந்தக் கோளாறு சரி செய்துக் கொடுக்கப்படுமாம்.

இந்த சுவிட்ச் சரி வர இயங்காததால் தீ பிடிக்க வாய்ப்புள்ளது என்று அந்த நிறுவனம் கூறியுள்ளது. ஆனால் இதுவரை அதுபோன்ற எந்த அசம்பாவிதமும் நடைபெறவில்லை என்றாலும் முன்னெச்சரிக்கையாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று அந்த நிறுவனம் தெரிவிக்கிறது.

அமெரிக்காவில் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு நடத்திய ஆய்வின் மூலம் இந்த கோளாறு கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு சாலைகளில் தொடர்ந்து டொயோட்டா வாகனங்களில் ஓட்டுநர் பக்க கதவு அருகே புகை வந்ததையடுத்து இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இந்த நிறுவனத்துக்கு தொடர்ந்து கஷ்ட காலமாகவே இருந்து வருகிறது. 2011ல் ஜப்பானில் நிகழ்ந்த பூகம்பத்தால் தயாரிப்பும் விற்பனையும் குறைந்தது. அதே போல் தாய்லாந்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்காலும் உற்பத்தி பாதிக்கப்பட்டது. அது மட்டுமில்லாமல் சீனாவில் ஜப்பானிய பொருட்களை பகிஷ்பரிப்பு போராட்டம் நடந்ததாலும் டொயோட்டா வாகனங்க விற்பனை பாதித்தது.

ராத்திரி முழுவதும் சக்கர நாற்காலியில் ஒரு பரிதாப பெண்

மெலிசா கிரஹாமுக்கு ஏற்பட்டது கொடுமையான அனுபவம். பிறந்திலிருந்தே சக்கர நாற்காலியில் தான் அவரது வாழ்க்கை. சக்கர நாற்காலி இல்லாமல் அவரால் எங்கும் போக இயலாது. சமீபத்தில் தனது நண்பருடன் காது வலிக்காக மருத்துவரைப் பார்க்கச் சென்றார். றோராண்ட்ரோ நகரின் மேற்கில் உள்ள செயிண்ட் ஜோசப் மருத்துவ மையத்தில் சிகிச்சை முடிந்து வீடு கிளம்பும் போது இரவு பத்தரை மணியாகிவிட்டது. அப்போதுதான் அவருடைய பிரச்சனை துவங்கியது. அந்த நேரத்தில் நகர சப்வே போக்குவரத்து நிறுத்தப்பட்டிருந்தது. அதனால் அதில் பயணிக்க வழியில்லை.

அதனால் அவரது நண்பர் டாக்ஸிகளுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் சக்கர நாற்காலியை ஏற்றிக் கொள்ளும் எந்த டாக்ஸியும் அவர்களுக்கு கிடைக்கவில்லை, நகரத்தில் இருக்கும் மிகப் பெரிய டாக்ஸி நிறுவனங்களுக்கு தொலைபேசி மூலம் அழைத்தும் யாராலும் இவர்களுக்கு உதவ இயலவில்லை. காரணம் அவர்களிடம் சக்கர நாற்காலியுடன் பிரயாணியை ஏற்றிக் கொள்ளும் வசதி அவர்களிடம் இல்லை.

அந்த வசதியை வைத்துள்ள டாக்சி நிறுவனங்கள் மாலை ஆறு மணிக்கு மேல் வண்டிகள் எதுவும் இல்லை கிடையாது என்று தெரிவித்துவிட்டன. அதனால் அந்த இரவு முழுவதும் மெலிசா கிரஹாம் சக்கர நாற்காலியிலேயே கழித்திருக்கிறார்.அவருடன் அவரது நண்பரும். மறுநாள் காலையில் சப்வே ரயில் போக்குவரத்து துவங்கிய பின் இருவரும் வீடு திரும்பியிருக்கிறார்கள்,

இது மெலிசாவுக்கு மட்டும் நடந்த தனிப்பட்ட பரிதாப சம்பவம் அல்ல. அன்றாடம் இது போன்ற அவதிகளை சக்கர நாற்காலிக்காரர்கள் சந்திக்க நேரிடுகிறது. நகரில் 4800 டாக்சிகள் ஓடுகின்றன. ஆனால் இவற்றில் மடக்க இயலா சக்கர நாற்காலிகளை ஏற்ற முடியாது, இப்போது வரும் மின்னனு சக்கர நாற்காலிகளை மடக்க முடியாது. அதனால் அந்த நாற்காலிகளை பயன்படுத்துபவர்கள் இப்படி நடுத் தெருவில் தவிக்கும் சூழ்நிலை உருவாகிறது.

இது போன்ற விசேஷ தேவையுடையவர்களுக்காக சிறப்பு டாக்சிகள் இயங்குகின்றன, கிட்டத்தட்ட 170 டாக்சிகள் அப்படிப்பட்டவை. அவையனைத்தும் வீல்–ட்ரான்ஸ் சேவையுடன் பல லட்சம் டாலர் ஒப்பந்தத்தில் இயங்குகின்றன. இவ்வகை சிறப்பு டாக்சிகளை பயன்படுத்த விரும்புபவர்கள் முதலிலேயே பதிவு செய்து வைத்துக் கொள்ள வேண்டும். அவரமாய் வேண்டுமென்றால் முப்பது டாலர் கட்டணம் கொடுக்க வேண்டும்.

"இந்த வகை சிறப்பு டாக்சி வசதிகளை இன்னும் ஒழுங்குப்படுத்த வேண்டும்" என்கிறார் டாக்சி உரிமங்கள் வழங்கும் அமைப்பின் தலைவர் ப்ரூஸ் ராபர்ட்சன். "இதற்கு கடுமையான ஒழுங்கு முறைகள் வேண்டும். இப்போது அப்படியில்லை. மாற்று திறனாளிகளை இரண்டாந்தர குடிமகன்கள் போல் நடத்துகிறோம். ஒருநாள் நமக்கும் அந்த நிலை வரலாம்" என்கிறார் அலெக்ஸ் மாட்றோசா. இவர் றொரண்ட்றோ பாரா ட்ரான்ஸிஸ்ட் என்ற டாக்சி சேவையை நடத்துகிறார். இவர் சொல்லுவது போல் இது கவனிக்க வேண்டிய பிரச்சனைதான்.

கனடாவில் ஆண்டுதோறும் 27 பில்லியன் டொலர் மதிப்பிலான உணவுகள் வீண்

கனடாவில் ஆண்டுதோறும் 27 பில்லியன் டொலர் மதிப்பிலான உணவுகள் வீணாவதாக ஆய்வொன் றின் மூலம் தெரியவந்துள்ளது. வீணாக்கப்படும் உணவுகளில் 51 சதவிகித உணவுகள் மக்களின் வீடுகளில் வீணாக்கப்படுகின்றது.

அதாவது உலகில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களில் மூன்றில் ஒரு பங்கு கனடாவில் மட்டும் வீணாக்கப்படுவதாக உலக உணவு விவசாய நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதற்கு காரணங்களாக உணவுகள் அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்றமை, காலாவதியாகும் திகதி குறித்த குழப்பம், உணவுகளை அதிகளவு வாங்குபவை தெரிவிக்கப்படுகின்றது.

அம்மாவைக் கொன்ற அப்பாவை மன்னித்த மகள்!



"என் அப்பாவை நான் மன்னித்து விட்டேன். அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர்." என்று தன்னுடைய தாயைக் கொன்ற தந்தையைக் குறித்து நீதிமன்றத்தில் தற்போது வாக்கு மூலம் தந்திருக்கிறார் மகள். மூன்று வருடங்களுக்கு முன்பு கொலை நடந்தபோது அவர் தந்த வாக்குமூலத்துக்கும் நேர்மாறாக உள்ளதுஇந்த வாக்குமூலம். அ∴ப்கானிலிருந்து கனடாவுக்கு 2003ல் குடிபெயர்ந்தது காய்ரி குடும்பம். அவர்களது மூத்த மகள் கிட்டி. இவர்தான் இப்போது இந்த வாக்குமூலத்தை தந்திருக்கிறார்.

"அவர் கனடாவுக்கு குடியேறிய பிறகு மகிழ்ச்சியாகவே இல்லை. அங்கே இருந்தபோது அவர்தான் குடும்பத்தை நிர்வகித்தார். ஆனால் இங்கே அம்மா அந்தப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார். காரணம் அப்பாவுக்கு ஆங்கிலம் தெரியாது. அதனால் அம்மாவே வெளி வேலைகள் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டார். இது அப்பாவுக்கு பிடிக்கவில்லை. அது அவர் மன நிலையை பாதித்தது," என்று கூறியிருக்கிறார் கிட்டி. கனடா வந்தப் பிறகு கணவன் மனைவி இடையே நிறைய சண்டைகள் நிகழ்ந்திருக்கின்றன,

2008ல் மனைவியை கொலை செய்வதற்கு முந்தின நாளும் இருவருக்குமிடையே பெரிய சண்டை நடந்திருக்கிறது. அந்த வார இறுதியில் கிட்டி தனது ஆண் நண்பர் வீட்டில் தங்கிவிட்டு வந்திருக்கிறார், இதனை கைய்ரியால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. ஆ∴ப்கானிஸ்தானில் தீவிர இஸ்லாமிய முறைபடி வாழ்ந்தவரால் இந்தக் கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. ஆறு குழந்தகளின் மூத்தவராக கிட்டி இப்படி இருப்பது அவருக்கு வெறுப்பைக் கொடுத்திருக்கிறது. அவர் குழந்தைகளை இஸ்லாமிய முறைபடி வளர்க்க விரும்பியிருக்கிறார். ஆனால் மனைவி அதற்கு அனுமதிக்காமல் மேற்கத்திய கலாச்சாரத்தில் வளருவது தவறில்லை என்று வாதிட்டிருக்கிறார். இதனை ஏற்றுக் கொள்ள இயலாத கைய்ரி மறுநாள் மனைவியை கொடூரமாய் கொன்றிருக்கிறார்.

"என் தந்தைக்கு இந்த வாழ்க்கையே பிடிக்கவில்லை. தற்கொலை செய்துக் கொள்ள பல முறை முயன்றிருக்கிறார். ஒரு முறை தன் கண்களில் மிளகாய் பொடியை எடுத்து தேய்த்துக் கொண்டார். அவருக்குப் பிடிக்காதது ஏதாவது வீட்டில் நிகழும்போது தன்னைத் தானே காயப் படுத்திக் கொள்வார் ஆனால் எங்கள் மேல் பலத்தை பிரயோகித்தது இல்லை" இல்லை என்கிறார் கிட்டி. இந்தக் கொலை நடைபெறுவதற்கு ஒரு மாதம் முன் கார் விபத்தில் கைய்ரி சிக்கி படுகாயமடைந்திருக்கிறார். அதன் பிறகு அவர் மனநிலை சரியில்லாமல் போய்விட்டது என்று மகள் கிட்டி கூறுகிறார், இந்தத் தகவலை அவர் இப்போதுதான் முதல் முறையாகத் தெரிவிக்கிறார்.

"அந்த விபத்துக்குப் பிறகு அவர் இரவில் கத்துவார். தலையை சுவரில் மோதுவார். அவரால் தூங்க இயலாது. அழுவார். விபத்துக்குப் பிறகு என் மூளை சரியாக வேலை செய்யவில்லை என்பார்" என்கிறார் கிட்டி. இந்த முழு வாக்குமூலத்திலும் தனது தந்தைக்கு ஆதரவாய்தான் பேசினார். அம்மா கொலை செய்யப்பட்டார் என்று சொல்லாமல் அம்மா இறந்தார் என்றே சொன்னார் என்பது குறிப்பிடத்தக்கது. முன்பு அப்பாவை எதிர்த்து பல காரியங்கள் செய்த பெண் இப்போது அப்பாவுக்கு ஆதரவாய் பேசுவது பலருக்கு ஆச்சர்யத்தை தந்தது.

மார்பக சோதனை, பெண்கள் குழப்பம்

ஒண்டோரிய பெண்கள் தங்கள் மார்பகத்தை எப்போது புற்று நோய்க்காக பரிசோதித்துக் கொள்வது என்று தெரியாமல் குழப்பத்தில் இருக்கிறார்கள் என்று கனடா புற்று நோய் சங்கம் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. 69 சதவீத பெண்களுக்கு எந்த வயதில் புற்று நோய்க்காக மார்பகத்தை பரிசோதித்துக் கொள்ள வேண்டும் என்பது தெரியவில்லை. 50லிருந்து 69 வயதுக்குள் பரிசோதிக்க வேண்டும் என்பதுதான் சிபாரிசு செய்யப்படும் வயது வரம்பு.

மார்பகத்தை பரிசோதிக்க மமோகிராம்தான் சிறந்தது என்ற விவரம் 46 சதவீத பெண்களுக்குத் தெரியவில்லை. "இந்த முடிவுகள் ஆச்சர்யத்தை தந்துள்ளன. பெண்களுக்கு இன்னும் விழிப்புணர்வு தேவை என்பதையே இந்த ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன" என்கிறார் ஜோன் டி நார்டோ. இவர் கனடா புற்று நோய் சங்கத்தின் பிரதிநிதி.

இணைய தளங்களில் புற்று நோய் குறித்து பலவித தகவல்கள் கிடைக்கின்றன. இவை பெண்களை அதிகம் குழப்பியிருக்கிறது. இது குறித்து உண்மையான தகவல்களைப் பெற மருத்துவரை அணுகுவதே சிறந்தது" என்கிறார் அவர். இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மமோகிறாம் என்ற மார்பக பரிசோதனை செய்துக் கொள்வதே புற்று நோயை ஆரம்பக் கட்டத்தில் கண்டுபிடிக்க சிறந்த வழி. ஆரம்ப நிலையில்தான் புற்று நோயை குணப்படுத்த வாய்ப்புகள் அதிகம்.

இந்த ஆய்வில் தெரிந்த நல்ல சங்கதி என்னவென்றால் 89 சதவீதப் பெண்கள் மமோகிராம் செய்துக் கொள்ள தயக்கம் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். ஆறு சதவீதத்தினர்தான் புற்றுநோய்க்கான பரிசோதனை செய்துக் கொள்ள அச்சமாக இருக்கிறது என்று தெரிவித்துள்ளனர். இது நல்ல அறிகுறி. புற்று நோய் பரிசோதனை செய்துக் கொள்ள பயமில்லை என்று அவர்கள் சொல்லியிருப்பதும் பரிசோதனை செய்துக் கொள்ள தயங்க மாட்டோம் என்றும் பெரும்பாலானோர் சொல்லியிருப்பதும் நல்ல விஷயங்கள் என்கிறார் டி நார்டோ.

2012ல் ஒண்டோரியோவில் 9100 பெண்களுக்கு புற்று நோய் தாக்கி அதில் இரண்டாயிரம் பெண்கள் இறந்துப் போவார்கள் என்று ஒரு தகவல் கூறுகிறது. 50லிருந்து 69 வயதுள்ள பெண்கள் புற்றுநோய் பரிசோதனை செய்துக் கொள்ள இரண்டு வழிகள் இருக்கின்றன. அவர்கள் ஒரு மருத்துவர் மூலம் செய்துக் கொள்ளலாம் அல்லது 1-800-668-9304 என்ற எண்ணின் மூலம் ஒண்டோரியோ மார்பக பரிசோதனை பிரிவை தொடர்புக் கொள்ளலாம்.

கனடிய அலுவலகத்தை அமெரிக்கா கணக்குப் பார்க்கப் போகிறது



கடந்த மூன்று வருடங்களில் முதல் முறையாக அமெரிக்க விவசாயத் துறை, கனடாவின் உணவு ஆய்வுக் கழகத்தின் கணக்குகளை சரி பார்க்கப் போகிறது. அல்பெர்டாவில் உள்ள எக்ஸ் எல் இறைச்சி நிறுவனத்தையும் பார்வையிடப் போகிறது. இந்த இறைச்சி நிறுவனத்தின் தயாரிப்புகளில் ஈகோலி கிருமிகள் இருந்தன என்று சில வாரங்களுக்கு முன்னால் புகார் எழுந்தது.

"பிற நாட்டு பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகள் அந்த நாடுகளுக்கு சென்று அந்த நிறுவனங்களின் கணக்குகளை பார்ப்பது இயல்பான ஒன்றுதான்" என்று பேராசிரியர் போனி பண்டின் தெரிவித்துள்ளார். "அமெரிக்காவிலிருந்து வரும் அதிகாரிகள் தங்களுக்கு தேவையான பொருட்களை ஆய்வு செய்வதுடன், ஈ கோலி பரிசோதனையை கனடா அரசு எந்த அளவு செய்கிறது என்பதையும் நேரடியாக கண்டறிவார்கள். அது அமெரிக்க தரத்துக்கு இருக்கிறதா என்பதையும் பார்ப்பார்கள்" என்று பண்டின் சொல்லுகிறார்,

"அவர்கள் இரண்டு விஷயங்களை முக்கியமாக பார்ப்பார்கள். உற்பத்தி செய்யப்பட்ட பொருள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தரத்தில் இருக்கிறதா என்பது ஒன்று, அதில் நுண்ணுயிர் கிருமி பரிசோதனை எந்த அளவு செய்யப்படுகிறது என்பது மற்றொன்று. இந்த இரண்டு சங்கதிகள் தான் அமெரிக்கர்களில் திட்டமாக இருக்கும்" என்கிறார் பண்டின்.

ஓடி வந்துப் பார்த்தால் ஒன்றுமில்லை நடிகை வீட்டில் நடந்த நாடகம்



அமெரிக்க நடிகையும் பாடகியுமான மைலி சைரஸ், லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் வசிக்கிறார். அவர் வீட்டில் மர்ம நபர்கள் புகுந்து வீட்டார்கள் உடனே வரவும் என்று காவல் துறையின் அவசர எண்ணுக்கு ஒரு அழைப்பு வந்தது. பதறிய லாஸ் ஏஞ்சலீஸ் காவல்துறையினர் நிமிடங்களில் மைலி சைரஸ் இல்லத்துக்கு விரைந்தார்கள். துப்பாக்கிகளுடன் வீட்டை சூழ்ந்தனர். ஒரு காவல் ஹெலி காப்டர் அவரது இல்லத்துக்கு மேலே பாதுகாப்புக்காக வட்டமடிக்கத் துவங்கியது.

இத்தனை பரபரப்பு வீட்டைச் சுற்றி இருக்க, வீட்டுக்குள் மிகுந்த அமைதி இருந்தது காவலர்களுக்கு சந்தேகத்தை எழுப்பியது. வீட்டை நெருங்கி உள்ளே பார்த்தால் யாருமே இல்லை. அது ஆளில்லா வீடாக இருந்திருக்கிறது. இது பொய் அழைப்பு. காவல்துறையை வீணாக அலையச் செய்த அழைப்பு போல் தோன்றுகிறது. அப்படி ஏமாற்றுவதற்காக அழைக்கப்பட்டிருந்தால் அழைத்த நபர் கைது செய்யப்பட்டு அவர்

சொந்த ஊர் சாப்பாடும் பணம் கொடுக்கும் தொழிலும்!



இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலிருந்து கனடாவுக்கு இருபத்துமூன்று வயதில் திருமண மாகி வந்தார் கிரன் காத்தாரியா. இப்போது அவருக்கு முப்பது வயதில் மகன் இருக்கிறார். ஆனால் செய்தி கிரணின் குடும்ப வாழ்க்கை அல்ல. அவரது குடும்பத்தின் தொழில் புத்திசாலித் தனத்தை பற்றியது, கனடாவுக்கு குடிபெயர்ந்த பிறகு கிரணின் உணவுப் பழக்கங்களில் மாறுதல்கள் ஏற்பட்டன. முக்கியமாய் குழந்தைகள் பிறந்த பிறகு. அவர்கள் இருவருக்கும் மசாலாவும் காரமும் சேர்ந்த இந்திய உணவுகள் அவ்வளவாய் பிடிக்கவில்லை. அதற்காக இந்திய உணவுகளையே வேறு மாதிரியாக சமைக்க வேண்டியதாயிருந்தது.

கிரண் கணக்குப் பாடத்தில் கெட்டியானவர். அதனால் சமையல் கணக்கையும் சரியாக போட்டார். ஒவ்வொரு சமையல் பொருளின் ருசியையும் வாசனையையும் அறிந்தார். எதனுடன் எதைச் சேர்த்தால் என்ன ருசி வருகிறது என்று ஆராய்ந்து அறிந்தார். வீட்டிலேயே பிள்ளைகளுக்குப் பிடிக்குமாறு இந்திய உணவுகளை சமைக்க ஆரம்பித்தார். அவர் சமையல் அறையே ஒரு ஆராய்ச்சிக் கூடமாகிவிட்டது.

ஒரு முறை அவர் தயாரித்த மாங்காய் சட்னியை வைக்க பாத்திரமில்லை அதனால் காலி ஹெய்ன்ஸ் கெட்சப் பாட்டிலில் அதை நிரப்பி வைத்தார். அதைப் பார்த்தபோது ஒரு யோசனை தோன்றியது. கெட்சப்புக்கு பதில் சட்னியை பாட்டில்களில் அடைத்து விற்றால் என்ன? பல இந்தியர்கள் வசிக்கும் கனடாவில் இந்திய மாங்காய் சட்னிக்கு தேவை இருக்குமே! கிரனும் அவரது கணவர் ரன்பீரும் சிந்தித்தார்கள். உடனடியாக அந்தத் திட்டத்தை செயல்படுத்தினார்கள்.

ஒரு இந்திய கடையில் அவர்கள் செய்த முதல் விற்பனை பதினைந்து டாலர்கள். இன்று அவர்களது நிறுவனமான கேஃப்ஜ பதிமூன்று வகையான சட்னிகளையும் குழம்புகளையும் தயாரித்து விற்பனை செய்துக் கொண்டிருக்கிறது. குடும்பமாய் செய்யும் இந்தத் தொழிலில் கிரணின் மகன் ரிஷி பங்குதாரராய் இருக்கிறார். அவரைத் தவிர எட்டு பேர் அவர்கள் நிறுவனத்தில் பணி புரிகிறார்கள்.

துவக்கப்பட்ட ஒரு வருடத்திலேயே அவர்கள் நிறுவனம் 300சதவீத வளர்ச்சி அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. கிரண் குடும்பத்தினர் மட்டுமல்ல, கனடாவுக்கு புலம் பெயர்ந்த பலர் இப்போது தங்கள் பாரம்பர்ய உணவுகளை அடுத்த தலைமுறையும் ருசிக்கும் வண்ணம் தயாரிக்கத் துவங்கியிருக்கிறார்கள். பல கனடிய மளிகைக் கடைகளில் பல நாட்டு பாரம்பர்ய சமையல் பொருட்கள் கிடைக்கத் துவங்கியிருக்கின்றன. அதே போல் உணவகங்களிலும் பல நாட்டு உண்வுகள் கிடைக்கின்றன.

தெற்காசியாவிலிருந்துதான் பலர் கனாடவிற்கு குடியேறியிருக்கிறார்கள் என்று ஒரு ஆய்வு குறிப்பிடுகிறது. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற தெற்காசிய நாடுகளிலிருந்தும் சீனா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலிருந்தும் கனடாவில் குடியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

2031 ஆம் வருடத்தில் தெற்காசியர்கள் மட்டும் சுமார் முப்பத்தாறு லட்சம் பேர் கனடாவில் இருப்பார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவர்கள் தவிர 27 லட்சம் சீனர்களும் பிலிப்பைன்ஸ் நாட்டவர்களும் இருப்பார்கள் என்று அந்த ஆய்வு சொல்லுகிறது. அதனால் பல நாடுகளின் பாரம்பர்ய உணவு கனடாவில் பரவி தொழில் ரீதியாக உயரப் போகிறது.

“இன்னும் சில வருடங்களில் இந்த உணவு தொழிலில் கடும் போட்டி வரப் போகிறது. அதும் சர்வதேச நிறுவனங்கள் பாரம்பர்ய உணவு தயாரிப்பில் இறங்கினால் போட்டி மிக பலமானதாக இருக்கும். ஆனால் நல்லவேளை அவர்களுக்கு இந்தியர்களின் உணவு எப்படி ருசிக்கும் என்று தெரியாது“ என்று சொல்லுகிறார் ரிஷி, கிரணின் மகன்.

தொழிலாளர்களுக்கு மனச் சோர்வு! தீர்வு என்ன?



இன்று பெருகி வரும் மனப் பிரச்சனைகளில் மிக முக்கியமான ஒன்று வேலை தொடர்பாக ஏற்படும் மனச் சோர்வு. வேலைப் பார்க்குமிடத்தில் இருக்கும் அரசியல், வேலைப் பளு, வேலை நேரங்கள், உடன் பணிபுரிபவர்கள் என இந்த மனச் சோர்வுக்கு காரணமாக அமைகின்றன. சென்ற செவ்வாயன்று வெளியிடப்பட்ட ஒரு ஆய்வறிக்கையில் 22 சதவீத கனடிய தொழிலாளர்களுக்கு மனச் சோர்வு நோய் இருக்கிறது என்ற தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிகுறிகளாக அதீதமாய் கவலைப்படுதல், தன்னம்பிக்கையற்று இருத்தல், பொறுமையில்லாமை, எதிலும் ஆர்வமில்லதிருத்தல் என சில அடையாளங்களை கனடிய பொது சுகாதரா அமைப்பு தெரிவித்துள்ளது. ஊழியர்களின் வேலைக் குறித்த மனச் சோர்வை போக்குவது முதலாளிகளின் கரங்களில்தான் இருக்கிறதா என்றால் முழுவதாக இல்லை என்கிறார்கள் மனவியளாலர்கள்.

“ஊழியர்களின் மனச் சோர்வை போக்குவது முதலாளிகளின் மிக பெரிய சவாலாக இருக்கிறது. ஏனென்றால் அவர்கள்தான் தங்கள் நிறுவனத்தின் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்“ என்கிறார் ஸ்டீவ் ஹவ்ரத். இவர் கனடிய பணியிட நலம் மற்றும் பாதுகாப்பு மையத்தின் தலைவராக இருக்கிறார். மன அழுத்தத்துக்கும் மனச் சோர்வுக்கும் குடும்ப சூழல், குழந்தைகள் பிரச்சனை, வீட்டு நிதி நிலை போன்ற பிற பிரச்சனைகளும் காரணமாக அமைகின்றன.

இந்த ஆய்வறிக்கையில் எண்பத்து நான்கு சதவீத ஊழியர்கள், தங்கள் சகா மனச் சோர்வில் பாதிக்கப்பட்டிருந்தால் உதவுவது தங்கள் கடமை என்று கருதுகிறார்கள் என்பது தெரிய வந்துள்ளது. இது போன்று மனச் சோர்வால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதையும் அவர்களால் ஏற்படும் உற்பத்தி பாதிப்பையும் கணக்கிட்டால் 50 பில்லியன் டாலர்களுக்கு மேல் வருகிறது என்று சொல்லப்படுகிறது.

கனடாவில் ஐந்தில் ஒரு தொழிலாளர் மனச் சோர்வு நோயால் பாதிக்கப்படுகிறார் என்று ஒரு ஆய்வறிக்கையின் தகவல் தெரிவிக்கிறது. ஆனால் இதை கனடிய உளவியலாளர் சங்கத்தை சேர்ந்த டாக்டர் கோஹென் மறுக்கிறார். “ ஐந்தில் ஒருவர் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் அவர்கள் தொழிலாளர்களாக தான் இருக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை.வேலையில்லாத கனடியருக்கு இந்த நோய் வரலாம். ஐந்தில் ஒரு கனடியருக்கு மனச் சோர்வு தாக்கும் ஆபத்து இருக்கிறது“ என்கிறார் அவர்.

தொடரும் செக்ஸ் தாக்குதல்கள்
போராடும் மக்கள்




கிறிஸ்டி பிட்ஸ் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் தொடரும் பாலியல் பலாத்காரங்களுக்கு எதிராக பேரணி நடத்தினார்கள். இப்படி இவர்கள் போராட்டப் பேரணி நடத்துவது இது இரண்டாம் முறை. இந்த நன்றியறிவித்தல் வாரத்தில் மூன்று பெண்கள் பாலியல் ரீதியாக தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

சென்ற சனிக்கிழமை இரவு ஒரு பத்தொன்பது வயது பெண் ஹார்பொர்ட் தெருவில் நடந்துச் சென்றபோது பின்னாலிருந்து வந்த மர்ம ஆசாமி அந்தப் பெண்ணை பலாத்காரம் செய்ய முயன்றிருக்கிறான். அந்தப் பெண் கூச்சலிடவே ஓடிவிட்டான். ஓடியவன் அதே தெருவின் வடக்குப் பக்கம் நடந்துச் சென்றுக் கொண்டிருந்த 29வயதுப் பெண்ணை அதே போல் தொல்லை செய்திருக்கிறான். இது நடந்தது இரவு பதினோரு மணி சுமாருக்கு.

மறு நாள் இரவிலும் இதே போன்ற ஒரு சம்பவம் இன்னொரு பெண்ணுக்கு நிகழ்ந்திருக்கிறது. இந்த மூன்று சம்பவங்களினால் அதிர்ச்சியடைந்த மக்கள் இந்தப் பேரணியை நடத்தியிருக்கிறார்கள். இந்த மாதம் மட்டுமல்ல,ஆகஸ்டு மாதமும் இது போன்று ஒன்பது பெண்கள் பாலியியல் ரீதியாக தாக்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த சம்பவங்களை அடுத்து அந்தப் பகுதிகளில் காவல்துறையின் ரோந்து அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த சம்பவங்கள் குறீத்து காவல் துறை பொது மக்களுக்கு சரியான தகவல்களை தருவதில்லை என்பது பொதுமக்களின் குற்றச்சாட்டாக இருக்கிறது. குற்றவாளியைப் பிடிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறீத்தும் காவல் துறை தகவல் ஏதும் கொடுக்கவில்லை என்று குறை சொல்லுகிறார்கள் பேரணியில் கலந்துக் கொண்ட மக்கள்.

ரொறாண்ரோவில் சூதாட்ட விடுதி
மக்கள் கருத்து




ரொறொண்ரோவின் இதயப் பகுதியில் முந்நூறு கோடி ரூபாய் செலவில் ஒரு பிரமாண்ட சூதாட்ட விடுதி அமைப்பதற்காக திட்டங்கள் உருவாக்கப்ட்டுள்ளன. ஆனால் இந்த திட்டத்தை குறித்து மக்கள் என்ன நினைக்கிறார்கள்?

"நடு நகரில் இது தேவையில்லை என்று கருதுகிறேன். ஊருக்கு வெளியே இது போன்ற சூதாட்ட விடுதியை அமைக்கலாம்." என்கிறார் மார்கெரட் அகுசி. "இது குறித்து குழப்பமாக இருக்கிறேன். சூதாட்ட வெறியர்கள் பலர் நகரத்தில் இருக்கிறார்கள். நானே சூதாட்டப் பிரியனாகதான் இருந்தேன். அதனால் பாதிக்கபட்டும் இருக்கிறேன். ஆனால் அதற்காக சூதாட்ட ஆர்வலர்களின் ஆசையை மறுக்கக் கூடாது என்று நினைக்கிறேன்" – இப்படி கூறுபவர் ஜேனிஸ் பார்டன்.

"பக்கத்திலேயே இருந்தால் வசதிதானே." என்ற கருத்தை சொல்லிகிறார் லீ சின் ஜெங். "ரொறாண்ரோவுக்கு வெளியே அமைப்பதுதான் நல்லது. அங்கே வாகன நிறுத்த நிறைய இடம் கிடைக்கும். மக்கள் வந்துப் போகவும் வசதியாகவும் இருக்கும்" என்கிறார் ரமீஸ் முகமது.

"எல்லா இடங்களிலுமே சூதாட்ட விடுதிகள் அமைக்க வேண்டும். நான் சம்பாதித்த பணத்தை என்ன செய்ய வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்யக் கூடாது." இப்படி சொல்வது ஜோயல் லகடா. "இது நகரப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவலாம் ஆனால் சமூகத்திற்கு உதவாது. சூதாட்ட வெறி சமூகத்தை பாதிக்கும்" என்கிறார் எலீ மாலா.:.ப்

அகதிகளுக்கு புகலிடம் தரும் ஆலயங்கள்!



அகதி நிலை மறுக்கப்பட்டு தாய் நாடுகளுக்கு துரத்தி விடப்படும் பரிதாப சூழலில் உள்ளவர்களுக்காக சில தன்னார்வ அமைப்புகள் போராடிக் கொண்டிருக்கின்றன. அவை தேவாலயங்களில் அவர்களுக்கு மறைவிடமும் அடைக்கலமும் தரச் சொல்லி ரசியமாக கேட்டு வருகிறார்கள். தெற்கு ஒண்டோரியோ சரணாலய கூட்டமைப்பு இது குறித்து பதிமூன்று தேவாலயங்களுடன் கடந்த சில மாதங்களாக பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறது. உள்ளூர் ஆலயங்களின் பாதிரியார்களுடனும் பேசி வருகிறது.


இவற்றில் நான்கு ஆலயங்கள் தாங்கள் நாடு கடத்தப்படும் நிலையில் இருக்கும் அகதிகளுக்கு மறைவிடம் தந்து உதவுவதாக உறுதி கூறியிருக்கின்றனவாம். பண்டைய காலத்தில் அதிகார வர்க்கத்தினரிடமிருந்து பாதுகாப்பு வேண்டுவோர் ஆலயங்களில்தான் தஞ்சம் புகுவார்கள். ஆனால் இந்த வழக்கம் இப்போது நடைமுறையில் இல்லை. அதை மீண்டும் கொண்டு வந்து அகதிகளுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

சென்ற வருடத்தில் இது போன்று தஞ்சம் அடைந்த சம்பவங்கள் நான்கு நடந்தது எனவும் காவல் துறையோ எல்லைப் பாதுகாப்பு படையோ இதில் தலையிடவில்லை என்று இந்த கூட்டமைப்பின் நிறுவனர் பேராசிரியர் மைக்கேல் கிரியல் தெரிவிக்கிறார். தற்போது ஜோசப் புசுமா என்ற ஹங்கேரியன் குடும்பம் இதுபோல் ஒரு ஆலயத்தில் சென்ற டிசம்பர் மாதம் முதல் ஒளிந்திருக்கிறது. இவர்களை வெளியேற்ற சொல்லி நீதிமன்றம் உத்தரவிட்டப் பிறகு இவர்கள் இப்படி அடைக்கலம் தேடி ஆலயத்தில் ஒளிந்திருக்கிறார்கள். இந்தக் குடும்பத்தினர் 2009ல் ரொறான்ரோ நகருக்கு அகதியாய் வந்தனர். இவர்கள் மீண்டு ஹங்கேரி சென்றால் கொல்லப்படும் சூழல் இருக்கிறது.

இப்படி அரசு உத்தரவுக்கு எதிராக ஆலயங்கள் அகதிகளுக்கு தஞ்சம் தருவது அரசுக்கும் ஆலயங்களுக்கும் இடையே மோதல் உருவாக்கும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

ஆச்சர்யம்!

24 மைல் உயரத்திலிருந்து குதித்த மனிதர்!



அசாதரமான சாதனைதான் இது. நாற்பத்திமூன்று வயதாகும் ஃபெலிக்ஸ் பாம்கார்ட்னர் இருபத்து நான்கு மைல் உயரத்திலிருந்து பூமி நோக்கி குதித்து, பத்திரமாக வந்திறங்கி சாதனை செய்திருக்கிறார், இது ஒரு உலகச் சாதனை. கீழிருந்து ஒரு ஹீலியம் பலூனில் வானம் நோக்கிச் சென்று அங்கிருந்து நியு மெக்ஸிகோ பாலைவனத்தின் மீது பறந்துக் கொண்டிருந்த போது வானி லிருந்து குதித்தார் ஃபெலிக்ஸ்.

"மேலிருந்து கீழே பார்க்கும்போதுதான் இந்த பூமியில் மனிதன் எத்தனை சிறியவன் என்று தெரிகிறது" என்று சொல்லும் ஃபெலிக்ஸ் பூமிக்கு வந்த வேகம் 834கிலோமீட்டர் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஒலித் தடையை தாண்டிய முதல் மனிதர் என்ற சாதனையையும் செய்திருக்கிறார். அது மட்டுமில்லாமல் பலூனில் 128097 அடி உயரம் சென்ற முதல மனிதரும் இவரே.

இவர் வானிலிருந்து குதிக்கும் காட்சி நேரடியாக இணையத்தில் ஒளிபரப்பப்பட்டது. இந்தக் காட்சிகளை இருபத்து நான்கு காமிராக்கள் மூலம் படம் பிடிக்கப்பட்டது. கீழே குதிக்கும் முன் சூடேற்றும் கருவி வேலை செய்யாததால் முகம் அருகே பனி படர்கிறது என்று தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு தகவல் தந்தார் ஃபெலிக்ஸ். பரவாயில்லை குதிக்கலாம் என்று அவர்கள் சம்மதம் சொன்ன பிறகே குதித்தார் ஃபெலிக்ஸ்.

இத்தனை வேகத்தில் கீழிறிங்கினால் மனித உடல் தாங்குமா என்ற சந்தேகம் பலருக்கு இருந்தது. ஆனால் வேகமாய் கீழே இறங்கிய போது தன்னால் எதையும் உணர இயலவில்லை என்று கூறுகிறார் ஃபெலிக்ஸ். 119,846 அடி வரை பாரச்சூட் உதவியில்லாமல் அந்தரத்தில் விழுந்த ஃபெலிக்ஸ் அதன் பிறகு தனது பாரச்சூட்டை விரித்து தரையிறங்கினார். மேலிருந்து அவர் கீழே வர ஒன்பது நிமிடங்கள் மூன்று விநாடிகள் ஆகியது.

என்னவாகப் போகிறீர்கள்? ஹாலோவீன் தின வேடங்கள்



வர இருக்கும் ஹாலோவீன் தின வேடங்களுக்காக ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக திட்டம் போட்டு வைத்திருக்கிறார்கள். "இந்த வருடம் நான் சாதாரண வேடம்தான். நான் ஒரு சூனியக்காரியாக போகிறேன். இது ரொம்ப எளிது. ஒரு துடப்பம் ஒரு தொப்பி போதும் சூனியக்காரியாக" என்கிறார் பிராண்டன் பகுதியில் வசிக்கும் பாட் கில் ஸ்மித். இன்னும் சில தினங் களில் டெக்ஸாசுக்கு குடிபெயரப் போவதால் ஹாலோவீன் சிந்தனை இவரிடம் இல்லை.

இந்த வருடம் ஸாம்பீஸ் (Zombies) எனப்படும் பேசும் பிணங்கள், இளவரசிகள், அதிரடி நாயகர்கள் என பல வேடங்கள் பிரபலமாக இருக்கப் போகிறது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். தொலைக்காட்சித் தொடரில் பிரபலமான ஹனி பூ பூ அழகிப் போலவும் வேடமணிந்து வரலாம். "இந்த முறை தொலைகாட்சித் தொடர்களில் பிரபலமான கதாபாத்திரங்கள் ஹாலோவீன் வேடங்களில் உலா வரும் என்று தெரிகிறது" என்கிறார் ஸ்காட் ஸ்வாலி. இவர் ரிட்ஜ்லேண்ட் பார்டி சிட்டியின் மேலாளர்.

"டக் டைனஸ்டி தொடரில் வரும் தாடி ராபர்ட்சன் போல் வேடம் போட பலர் தாடி கேட்டு வருகிறார்கள். ஆனால் மிகப் பிரபலமாக இருப்பது அதிரடி நாயகர்களான அவெஞ்சர்ஸ் மற்றும் டிஸ்னி இளவரசிகள்" என்கிறார் ஸ்காட். மார்ஃப்சூட்ஸ் எனப்படும் உடல்தழுவிய ஆடைகளும் மிகப் பிரபலமாக இருக்கிறதாம். கால் நுனியிலிருந்து தலை வரை முழுக்க மூடும் இந்த உடையணிந்து நீங்கள் எல்லோரையும் பார்க்கலாம், ஆனால் உங்களை யாராலும் பார்க்க இயலாது.

உலகெங்கும் மிகப் பிரபலமாக இருக்கும் ஆங்கிரி பேர்ட்ஸ் எனப்படும் கோபப் பறவைகளின் வேடங்களும் மக்களைக் கவர்ந்துள்ளன என்று தெரிகிறது. பெண்கள் பெரும்பாலும் காவல்துறை சீருடையைதான் விரும்புகிறார்கள். இது தேர்தல் காலம் என்பதால் அரசியல் தலைவர்களின் முகமூடிகளும் அதிக அளவு விற்பனைக்கு வந்துள்ளது.

ஊனமுற்றோருக்கான நிறுத்தத்தில் தபால் வாகனம்!



காத்தி மார்சின் தனது மருத்துவரைப் பார்ப்பதற்காக வந்த போது அவருக்கு ஒரு அதிர்ச்சியான காட்சி காத்திருந்தது. ஊனமுற்றோர் வாகனம் நிறுத்தும் இடத்தில் அரசு தபால் வாகனம் நின்றுக் கொண்டிருந்தது. "நான் எனது வாகனத்தை அங்கே நிறுத்தலாம் என்று வந்தால் அங்கே தபால் வாகனம் நின்றுக் கொண்டிருந்தது. அந்த வாகனத்தை நிறுத்த பல இடங்கள் இருந்தும் அவர்கள் அங்கே வாகனத்தை நிறுத்தியிருந்தார்கள், அதற்கு காரணம் அந்த இடத்துக்கு அருகிலேயே தபால் பெட்டி இருந்ததுதான்" என்கிறார் காத்தி. இவரால் சரியாக நடக்க இயலாது.

இந்த சம்பவம் மாலை ஐந்து மணிக்கு மேல் ஷெப்பர்ட் அவென்யுவில் நடந்தது. கனடா தபால் துறையை சேர்ந்த அனிக் லொய்சர், இந்தச் சம்பவத்தை சாதாரனமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்."இதை ஏற்றுக் கொள்ள இயலாது. இதனால் பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். இந்த சம்பவத்தைக் குறித்து தீர விசாரிக்கப்படும்" என்று லொய்சர் தெரிவித்திருக்கிறார்.

மனித உரிமைகள்தான் மிக முக்கியம் காங்கோவுக்கு பிரதமர் வலியுறுத்தல்



காங்கோவில் நடைபெறும் ப்ரெஞ்சு மொழி பேசும் நாடுகளுக்கான மாநாட்டில் கலந்துக் கொள்ளச் சென்றிருக்கும் கனடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் அங்கு உரையாற்றினார். அப்போது, "நாட்டு மக்களின் தனி மனித உரிமைகளைப் பாதுகாப்பது அந்த நாட்டின் பொறுப்பாகும். எல்லா அரசாங்கங்களும் தனது குடி மகன்களுக்கு நல்ல அரசையும் தனி மனித உரிமைகளையும் நீதியையும் வழங்க கடமைப் பட்டுள்ளன" என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

காங்க்கோவில் நிகழும் மனித உரிமை மீறல்கள்களை குறி வைத்தே பிரதமர் இப்படி பேசியிருப்பதாக தெரிகிறது. இந்த ஃப்ராங்கோபோனி மாநாட்டை காங்கோ தான் நடத்துக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் அந்நாட்டில் நடந்த தேர்தலில் பல மோசடிகள் நடந்ததாக கூறப்பட்டது. அதில் வெற்றி பெற்று ஜோசப் கபிலா ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறார்.

அந்நாட்டில் அதிக அளவில் பெண்களுக்கு எதிரான வன்முறையும் நடக்கிறது. நாட்டின் ராணுவமும் புரட்சி அமைப்புகளும் அப்பாவி பெண்களைதான் குறிவைத்து பாலியியல் ரீதியாக தாக்குகினறன என பல மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டியிருக்கின்றன. காங்கோ ஜனாதிபதி கபிலா இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் அளித்து பேசுகையில், "பல வருட போராட்டங்களுக்குப் பிறகு காங்கோ இப்போதுதான் தனது லட்சியங்களை நோக்கி நடை போடத் துவங்கியுள்ளது. சட்டம், நீதி, மக்களின் அடிப்படை உரிமைகள் இவற்றை பாதுகாக்க எனது அரசு பாடுபடும்" என்று கூறியிருக்கிறார்.

மலைக்கவும் பிழைக்கவும் வைக்கும் குடியிருப்புகள்! மாறும் ரொறாண்ரோ.



ரொறான்ரோவின் இந்தத் தலைமுறைக்கு நடக்கும் நல்ல விஷயம் அடுக்குமாடி குடியிருப்புகள் என்றுதான் சொல்ல வேண்டும். இந்தக் குடியிருப்புகள் பலருக்கு வீடு வழங்கியிருக்கிறது என்பது மட்டுமல்லாமல். பல்லாயிரக் கணக்கானோருக்கு வேலை வாய்ப்புகளை தந்திருக்கிறது. இந்தக் கட்டிடத் தொழிலால் ரொறான்ரோ நகரத்துக்கும் லட்சங்களில் வருமானம் கிடைக்கிறது.

இப்போது நகரைச் சுற்றி 184 நான்கு வானுயர் குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றைப் பார்ப்பதற்கே மலைப்பாக இருக்கின்றன. முன்பு ரொறண்ரோவில் மிக உயர்ந்த கட்டிடம் வணிக வங்கியின் கட்டிடம்தான். அது முப்பத்தாறு மாடிகளைக் கொண்டது. இப்போது அதை விட உயர்ந்த கட்டிடங்கள் வந்துவிட்டன. இத்தனைக் கட்டிடங்கள் கட்டப்படுவதால் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. பிழைப்பு நடக்கிறது.

ஆனால் இப்படி கட்டிடங்கள் உருவாகுவது சிலருக்கு எரிச்சலை உண்டு பண்ணியிருக்கிறது. ரொறாண்ரோ ஒரு "சிமெண்ட் நகர" மாக மாறிவிட்டது என்று குறை கூறுகிறார்கள். அழகாக பரந்து விரிந்து இருந்த நகரம் இப்போது கட்டிடங்களால் குறுகி விட்டது என்கிறார்கள். ஆனால் ரொறாண்ரோ வளர்ச்சிப் பாதையில் நடை போடுகிறது என்பதைதான் இந்தக் உயர்ந்த குடியிருப்புக் கட்டிடங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஆனால் இது போன்ற கட்டிட வளர்ச்சிக்கு முன்னால் பல வட அமெரிக்க நகரங்களைப் போல் ரொறாண்ராவைவிட்டு மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். 1941ஆம் வருடம் 55000மாக இருந்த மக்கள் தொகை 1976ல் 34000மாக குறைந்துவிட்டது. ஆனால் இப்போது குடியிருப்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்துக் கொண்டே இருக்கிறது.

இது போன்ற கட்டிடங்களால் நகரத்துக்கும் நிதி சேருகிறது. இந்த வருடம் இதுவரை 20மில்லியன் டாலர்கள் கட்டிடம் கட்டுபவர்களால் நகர நிதிக்கு பணம் வந்து சேர்ந்திருக்கிறது. இந்த வளர்ச்சிகளால் மந்தமான நகரம் மகிழ்ச்சியான நகரமாக மாறுகிறது என்றே சொல்ல வேண்டும்.

Publisher : Tamils Business Connection
Tel : 416-272-8543
Web : ekuruvi.com
Email : info@ekuruvi.com

2000 ஊழியர்கள் தற்காலிக பணி நீக்கம்! எக்ஸ் எல் நிறுவனம் அதிரடி!



மாட்டிறைச்சி உணவுப் பொருட்களில் ஈகோலி கிருமி கலந்த விவகாரத்தில் மாட்டிக் கொண்ட எக்ஸ் எல் நிறுவனம் இரண்டாயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்யப் போவதாகவும் இது தற்காலிகமானதும் என்றும் அறிவித்திருக்கிறது.

"கடந்த மூன்று வாரங்களாக எங்கள் ஊழியர்களுக்கு முழுச் சம்பளம் கொடுத்து வந்தோம். இந்தக் கடினமான சூழலிலும் எங்கள் மதிப்பு வாய்ந்த ஊழியர்களுக்காக சம்பளம் கொடுத்தோம்" என்று தெரிவித்திருக்கிறார் எக்ஸ் எல் நிறுவன தலைமை மேலாளர் பிரியன் நில்சன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் எக்ஸ் எல் உணவு நிறுவனம் குறைந்த அளவு உற்பத்தி செய்யலாம் என்று அரசு தெரிவித்திருந்தது. உற்பத்தியை கனடிய உணவு ஆய்வு மையம் மேற்பார்வையிடும் என்றும் சொல்லியிருந்தது. அதுபோல் சென்ற வெள்ளியும் சனியும் கனடிய உணவு ஆய்வாளர்கள் மேற்பார்வையில் இறைச்சி வெட்டப்பட்டது. ஆனால் மீண்டும் உற்பத்தியை நிறுத்தி வைக்க நிறுவனம் முடிவு செய்துள்ளது. "உற்பத்தியை நிறுத்தி வைப்பது என்று நிறுவனம் முடிவெடுத்திருப்பதால் எங்களால் ஆய்வு செய்ய இயலவில்லை" என்று உணவு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தச் சூழலில் ஊழியர்களை நீக்கியிருப்பது பெரு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. இவர்களில் பலர் மாதச் சம்பளத்தை மட்டும் நம்பி வாழ்க்கையை நடத்துபவர்கள். இவர்கள் மற்ற மாகணங்களுக்கு வேலை தேடி போவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

உடல் தடவலா அல்லது வன்புணர்வா? காவல்துறைக்கு புதிய கேள்விகள்



கிறிஸ்ட் பிட் பகுதியில் இரவு நேரத்தில் பாலியல் ரீதியாக பெண்கள் குறி வைத்து தாக்கப்படுவதைக் குறித்து பொது மக்கள் பல கேள்விகளை காவல் துறைக்கு வைத்திருக்கிறார்கள். ஆகஸ்ட் மாதம் ஒன்பது தாக்குதல்களும் இந்த மாதம் மூன்று தாக்குதல்களும் நடந்திருக்கின்றன. ஆனால் இதுவரை யார் இதை செய்திருப்பார்கள் என்பதற்கு எந்தத் துப்பும் கிடைக்கவில்லை. இந்த பயங்கர செயல்களில் ஈடுபட்டிருப்பது ஒருவரா அல்லது பலரா என்ற விவரமும் தெரியவில்லை. இவை யெல்லாம் காவல் துறையினரிடம் கேள்விகளாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவங்களை காவல்துறை "பாலியல் தாக்குதல்" என்று குறிப்பிட்டுள்ளது. பாலியியல் தாக்குதல் என்றால் என்ன அர்த்தம் என்பது தெளிவாக இல்லை. புகார் கொடுத்த பெண்கள் தங்களை ஒரு மனிதன் பின்புறமாக வந்து பாலியியல் ரீதியாக தாக்கினான் என்று சொல்லியிருக்கிறார்கள். இது வெறும் தடவல்தான் என்று எடுத்துக் கொள்ள வேண்டுமா என்று தெரியவில்லை. வெறும் தடவல்தான் என்று சொல்லுகிறார்கள் ஆனால் பாதிக்கப்பட்டப் பெண்ணுக்கு அது எப்பேர்பட்ட மன உளைச்சலைத் தரும்? அந்த சம்பவத்தை அவளால் மறக்க முடியுமா?

அதுமட்டுமில்லாமல் வன்புணர்வு சம்பவங்களால் பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களுக்கு நடந்த கொடூரத்தை வெளியில் சொல்ல தயங்குகிறார்கள். வன்புணர்வு என்று சொன்னால் பலவித சங்கடங்களை சந்திக்க நேரிடுகிறது. சட்டத்திலும் வன்புணர்வுக்கும் (கற்பழிப்பு) பாலியல் தாக்குதலுக்கும் வேறுபாடுகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

கிறிஸ்டி பிட் பகுதியில் நடந்தது வெறும் பாலியல் தாக்குதல் அதாவது தடவல்தான் என்று சொன்னால், பலர் " வெறும் தடவல்தான், வன்புணர்வு (கற்பழிப்பு) இல்லையே" என்று சொல்லிவிட்டு போய்விடுவார்கள்.ஆனால் எல்லாவித பாலியல் பலாத்காரங்களும் பெண்கள் மனதில் ஆழ்ந்த காயங்களை ஏற்படுத்துகிறது, இதை எல்லோரும் புரிந்துக் கொள்ள வேண்டும்.

ஆலீஸ் என்ற பதினெட்டு வயதுப் பெண் ஸைரகஸ் பல்கலைக் கழகத்து சுரங்கப் பாதையில் வைத்து வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டாள் . அப்போது அந்தக் கொடூர சம்பவத்தை காவல் துறை அதிகாரியிடம் விவரித்த போது அவர் சொன்னது, "நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரி. இதற்கு முன்னால் நடந்த சம்பவத்தில் அந்தப் பெண்ணை வன்புணர்வு செய்தவன் கொன்று விட்டான்". சொல்லுங்கள் ஆலீஸ் அதிர்ஷ்டக்காரியா? இந்த சம்பவங்களில் என்ன நடந்தது என்பதை பெண்களிடம் காவல்துறை சொல்ல வேண்டும். அதுதான் நல்லது.



www.fortunecomputer.com
Fortune Computers
halloween specials
FIRST 100 CUSTOMERS PER DAY TO RECEIVE FREE STUFF ONLY WITH PURCHASE AT 3331 MARKHAM RD THIS SATURDAY & SUNDAY
App Store
ANDROID
OCTOBER 12TH TO OCTOBER 18TH
FIRST COME FIRST SERVE
5 CUSTOMERS 7" Android Tablet FREE
15 CUSTOMERS 32GB USB Drive FREE
25 CUSTOMERS Ladies Handbag FREE
5 CUSTOMERS Digital Camcorder FREE
25 CUSTOMERS Headset with Microphone FREE
20 CUSTOMERS 8GB Micro SD Card FREE
1 PER CUSTOMER McAfee 2012 Antivirus $4.99
1 PER CUSTOMER FM TRANSMITTER SD/USB $3.99
1 PER CUSTOMER 3-in-1 iPhone Charger $3.99
1 PER CUSTOMER PS2 Mouse 49¢
PS2 Keyboard $1.99
1 PER CUSTOMER 50PK CD-R $7.99
LED TV Full HD 47" VIZIO Refurbished $469
1 PER CUSTOMER LED TV WiFi Ready 32" PHILIPS Refurbished $269
1 PER CUSTOMER LED TV 24" Refurbished $149
50PK DVD-R 16X $7.99
8GB USB Drive $4.99
Wall Mount up to 42" $11.99
LCD Monitor 17" $29
LED Monitor 18.5" $76
Subsonic Racin' Pro $149
9" Portable DVD Player $54
Laptop Cooling Pad $4.99
1 PER CUSTOMER CD/DVD Case 120PCS $3.99 200PCS $4.99 320PCS $8.99
Intel P4 2.8 GHZ 40GB HD 1GB DDR • 3D Sound • 10/100 Ethernet Ready • DVD-ROM/XP COA $49
Intel Core 2 Duo 3.0 GHZ 160GB HD 2GB DDR2 • DVD-RW • 10/100 Ethnet Ready • Windows 7 HP with CD REFURBISHED $229
Intel Dual Core 3.2 GHZ 80GB HD 2GB DDR2 • DVD-ROM • 10/100 Ethernet Ready • Windows 7 HP with CD REFURBISHED $109
Intel Core 2 Duo 1.6GHZ 40GB HD 2GB DDR2 • 3D Sound • 10/100 Ethernet Ready • DVD-ROM • WIN 7 HP REFURBISHED 15.6" $199
Lenovo i3 380m 2.53GHZ 320GB HD 6GB DDR3 • DVD-RW • HD Webcam • Card Reader • Windows 7 Professional 64 Bit • HDMI Out • 1 Year Manufacturer's Warranty 15.6" $469
Intel i7-3610QM 750GB HD 8GB DDR3 • DVD-RW • HD Webcam • USB 3.0 + USB 2.0 • HDMI Out • Card Reader • 64 Bit • WIN 7 HP • 1 Year Manufacturer's Warranty 15.6" $749
SYSTEM UPGRADES
Norton $12.99
McAfee AntiVirus Plus $8.99
BARE BONE SYSTEMS
• AMD X2 250 • 4GB DDR3 • HD Video • High Definition Sound • Ethernet Ready • 500W ATX Case • 24X DVD-RW $189
32GB Micro SD Card PHILIPS $25.99
2TB External Hard Drive maxell $94
16CH Security System $179
Blu-ray Player $49
ANDROID 4.0 TABLET 7" 760TPC $99
INTEL P4 3.2 GHZ • 1GB DDR • 80GB HD • DVD Rom • Windows XP COA $59
8GB MP3 PLAYER $29
4GB DDR3 $18
MONEY MISER
INTEL G870 500GB Hard Drive 4 GB DDR3 • HD Video • High Definition Sound • 10/100 Network • 500W ATX Midtower • 24X DVD-RW +/- • Keyboard & PS2 Mouse $289
MR. POPULARITY
Intel Core i3 3240 1.5 TB 5900RPM 8GB DDR3 • High Definition Sound • 1GB Graphics • 500W ATX Midtower • 24X DVD-RW +/- • Wireless Keyboard & Mouse combo $419
RAGU ZONE
Intel Core i5 2500 1.5TB 7200RPM 8GB DDR3 • 1GB DDR3 Graphics with HDMI/DVI out • High Definition Sound • 10/100 LAN • 500W ATX Midtower • 24 X DVD-RW +/- • Wireless Keyboard & Mouse Combo • WIN 7 HP $599
INFORMATION HIGHWAY
Intel Core i7 3770K 2TB Hard Drive 16GB DDR3 • 1GB Graphics with HDMI out • High Definition Sound • 10/100 LAN • 500W ATX Midtower • Bluray Writer • Wireless Keyboard & Mouse Combo • 7.1 Sound • WIN 7 HP $899
PC Tuneup from $19
Computer Service from $9
WE FIX LAPTOPS LCD SCREEN REPLACEMENT POWER JACK REPLACEMENT
REGULAR STORE HOURS:
MON - FRI: 10am - 7:30pm
SATURDAY: 10am - 7pm • SUNDAY: 11am - 6pm
TORONTO 280 COLLEGE ST 416-324-9426
SPADINA COLLEGE
SCARBOROUGH 1274 KENNEDY RD 416-751-8810
ELLESMERE KENNEDY LAWRENCE
CONCORD 2180 STEELES AVE W 905-532-0067
KEELE STEELES
MARKHAM/SCARBOROUGH 3331 MARKHAM RD 416-335-3433 Orange Building
STEELES MARKHAM
Products are available in limited quantities. Products may not be available at all locations. Prices and availability are subject to change without notice. Fortune Computers is not responsible for any misprints or errors. All products are 3% cash discounted. If not paying by cash or debit, 3% will be added to your total.

www.ekuruvi.com
கருவி

சிறகு - 01 19.10.2012 பறப்பு -05